Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 235

ஞாயிற்றுக்கிழமை
20 ஜூலை 2025

ஆடி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

**அடக்குமுறைச் சட்டத்துக்கெதிராக கையெழுத்து!**

வெளிநாட்டவர்களும் கையொப்பம்

விரிவு பக்:- 02

# செம்மணிப் புதைகுழியை அகழ்வது வீண்வேலையாம்

## போர் நடந்தால் புதைகுழிகள் சகயம்தானே வன்மத்தைக் கக்குகின்றார் கம்மன்பில!



**கொழும்பு, ஜூலை 20**

**யுத்தம் நடந்த மண்ணில் எங்கு அகழ்ந்தாலும் மனிதப்புதைகுழிகள் இருக்கத்தான் செய்யும். ஆதலால், செம்மணி மனிதப்புதைகுழியில் அகழ்வுப்பணியை மேற்கொள்வது தேவையற்ற விடயம் - இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

15



இஸ்ரேலில்

## இலங்கைத் தொழிலாளர்கள் பயணித்த பஸ்ஸில் தீவிபத்து

### கண்ணாடிகளை உடைத்துத் தப்பித்தனர்

கொழும்பு, ஜூலை 20
இஸ்ரேலில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இலங்கையர்கள் பயணித்த பேருந்தில் பெரும் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. நூலிழை

15



## நாகர்கோவில் பகுதியில் 81 கிலோ கஞ்சா மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 20
யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் பகுதியில் நேற்றுக்காலை 81 கிலோ 300 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.
இராணுவப் புலனாய்வுப்பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படை

15

விவசாயிகளுக்கு

## இழப்பீடுகள் வழங்க முடியாதெனில் முல்லையில் இருந்து வெளியேறுக!

### கமநல காப்புறுதிச் சபைமீது ரவிகரன் காட்டம்



முல்லைத்தீவு, ஜூலை 20
வெள்ள இடர்போன்ற அழிவுகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, இழப்பீடுகளை அல்லது நெல் அழிவுக் கொடுப்பனவுகளை வழங்க முடியாதென்றால், எதற்காக முல்லைத்தீவில் இருக்கின்றீர்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர்

15

## அனைத்து வாக்குறுதிகளையும் அரசாங்கம் நிறைவேற்றும்!

### அமைச்சர் சந்திரசேகர் உறுதி



யாழ்ப்பாணம், ஜூலை 20
மக்களுக்கு வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் கட்டம் கட்டமாக நிறைவேற்றுவோம் என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.
நெடுந்தீவுக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட அமைச்சர், அங்கு மக்கள் சந்திப்பிலும் ஈடுபட்டார்.
இதன்போது அவர் மேலும் தெரிவித்த

15



## அப்பக்கடை நடத்தக்கூட அரசுக்குத் தகுதியில்லை

### முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்திக விமர்சனம்

கொழும்பு, ஜூலை 20
நாட்டின் பொருளாதாரநிலைமை இப்படியே சென்றால், ஜனாதிபதி அநுர தலைமையிலான ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மக்கள் புரட்சி வெடிக்கும். ஏனெனில் இவர்களால் அப்பக்கடைகூட நடத்த முடியாது என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:
இந்த ஆட்சியாளர்கள் விவசாயிகளுக்கு எதிர்பார்ப்பைக்

15

## வடக்குக் கடற்பரப்பில் காற்று எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை 20
வடக்கு மாகாணக் கடற்பரப்பில், மணித்தியாலத்துக்கு 55 கிலோமீற்றர் வேகத்தில் கடுமையான காற்றுடன்கூடிய காலநிலை நிலவும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்ததாவது:-

15

**முச்சந்தி முரளி**

**'உவையளுக்கு உது சகஜம் என்டதால தானே ஆடிக்கலவரத்தில இருந்து முள்ளிவாய்க்கால் மட்டும் ரத்தம் குடிச்சவை'**

## சிறுவயதுக் கர்ப்பம் நாட்டில் அதிகரிப்பு!

### அமைச்சர் சரோஜா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 20
பாடசாலை மாணவிகள் கர்ப்பம் தரிப்பது அதிகரித்து வருவதாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:

15

சஞ்சீவி

மக்கள் ... தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4137 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 14 47 56 79 |
| விசேட எழுத்து | E |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1204 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 06 21 42 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0163 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 7 4 0 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2243 |
| ஆங்கில எழுத்து | C |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கங்கள் | 05 15 27 47 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5895 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 1 7 4 3 1 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1925 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 06 08 26 68 |
| விசேட எழுத்து | S |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0470 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 4 3 1 6 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0011 |
| வெற்றி இலக்கினம் | மகரம் |
| வெற்றி இலக்கங்கள் | 02 03 08 11 |

# தேக ஆரோக்கியத்துக்காக சைக்கிள் மிதிக்கும் காலம்

## வடக்கு ஆளுநர் கவலை

**யாழ்ப்பாணம், ஜூலை 20**

**இன்றைய காலத்தில் தங்கள் தேவைக்கு சைக்கிளைப் பயன்படுத்துபவர்களைவிட தேகாரோக்கியத்துக்காகப் பயன்படுத்துபவர்களே அதிகம். இன்றைய இளைய சமூகத்திடம் சைக்கிள் பாவனை தற்போது அருகிவருகின்றது. அதனை ஊக்குவிக்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

பிரபல சைக்கிளோட்ட வீரர் அமரர் அகஸ்ரின் ஞாபகார்த்த மாபெரும் சைக்கிளோட்டப்போட்டி - 2025 பரிசளிப்பு நிகழ்வு, சிரேஷ்ட வெளிநாட்டுச்சேவை உத்தியோகத்தர் அகஸ்ரின் கிறிஸ்ரிரூபன் தலைமையில் கிளிநொச்சி கூட்டுறவுக் கலாசார மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்ற ஆளுநர் உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

அன்றைய காலத்தில் எமது பணிக்கு நாம் சைக்கிளை மிதித்தே சென்றோம். கடுமையான காற்று வீசும்போது அந்த வலிகளை எதிர்கொண்டமையாலே எமக்கு வலிமை கிடைத்தது. எந்தச் சவால்களையும் எதிர்கொள்ளும் ஆற்றல் கிடைத்தது.

ஆனால் இன்றுள்ள இளம் தலைமுறையினருக்கு இவற்றைப்பற்றித் தெரிந்திருப்பதற்கு வாய்ப்புகள் மிக அரிது.

இப்போது ஒவ்வொரு நாளும் மாலை நேரங்களில் பிரதான வீதிகளில் சில இடங்களில் பெற்றோர் குறிப்பாக தாய்மார் கூட்டமாக நிற்பார்கள். பிள்ளைகளை தனியார் கல்வி நிலையங்களில் விட்டுவிட்டு அவர்களுக்காக காத்திருப்பார்கள். பிள்ளைகளை நடந்து செல்வதற்குக்கூட அனுமதிப்பது குறைவாக உள்ளது. சைக்கிள் ஓட்டம் என்பதே அருகி வரும் சூழலில் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் வியப்பாகத்தான் பார்க்கப்படும்.

தனது தந்தையார் அகஸ்ரின் நினைவாக அவரது மகன் முன்னெடுக்கும் இத்தகைய போட்டிகள் எங்களுக்குத் தேவை. எங்கள் பிள்ளைகள் தங்களை வலிமையாக்கிக்கொள்ள சவால்களை எதிர்கொள்வதைத் தயார்படுத்திக்கொள்ள இவை அவசியம்- என்றார். (ச-113)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0603 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 4 6 6 3 3 1 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2869 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 42 46 60 73 |


| சனிதா | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கம் | 23 24 53 54 |
| வெற்றி வாரம் | 5030 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0729 |
| வெற்றி இலக்கம் | 05 30 34 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| கன்னி | |
| வெற்றி இலக்கம் | 25 26 27 33 |
| சீட்டிழுப்பு வாரம் | 4581 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கம் | 02 13 14 48 |
| வெற்றி வாரம் | 2045 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 19.07.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கம் | 02 16 29 62 |
| வெற்றி வாரம் | 2695 |



# மயிலிட்டி மக்களுடன் கஜேந்திரகுமார் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

வலிகாமம் வடக்கு மயிலிட்டிப் பகுதியில் விடுவிக்கப்படாத காணி உரிமையாளர்களைத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.

சந்திப்பில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் உள்ளூராட்சிசபை உறுப்பினர்களும் உடனிருந்தனர். (ச-25,66)



# அடக்குமுறைச் சட்டத்துக்கெதிராக யாழில் கையெழுத்துச் சேகரிப்பு!

## வெளிநாட்டவர்களும் கையொப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இல்லாது செய்யக் கோரிய அடையாளக் கையெழுத்துப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றது.

சம உரிமை இயக்கம் அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டம் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தின் முன்பாக இடம்பெற்றது. இதில் தமிழ் அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் வெளிநாட்டவர்களும் பங்கேற்று கையெழுத்துகளைப் பதிவு செய்தனர்.

இன்னொரு அடக்குமுறைச் சட்டம் வேண்டாம், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இரத்துச் செய், காணாமலாக்கப்பட்ட அனைவருக்கும் இப்போதாவது நீதி வழங்கு, அனைத்து தேசிய இனத்தவருக்கும் சம உரிமைகளை உறுதிசெய்யும் புதிய அரசியலமைப்புக்காகப் போராடுவோம் போன்றவற்றை வலியுறுத்தி இந்தப் போராட்டம் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ச-20,66,27)



# மக்களின் வாழ்க்கை அரசுக்கு விளையாட்டு

## காவிந்த எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

வாயைத் திறந்தால் பொய்யை மாத்திரம் சொல்லும் இந்த அரசு மக்களின் வாழ்க்கையுடன் விளையாடும் தேவையற்ற விளையாட்டை நிறுத்தவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்த அரசு ஆட்சிக்கு வந்து எல்லாம் முடிந்துவிட்டது. விவசாயம், வர்த்தகம் எல்லாம் சிதைந்துவிட்டது. அவர்கள் தேர்தலுக்குமுன் சொன்னது ஒன்று இப்போது செய்வது வேறொன்று.

மக்களின் உணர்வைப் புரிந்துகொள்ளாத அரசு இது. மீனவர்களுக்கு எரிபொருள் நிவாரணம் கொடுப்பதாக கூறினார்கள். ஒரேயொரு தடவைதான் கொடுத்தார்கள். அதன்பின் கப்சிப்.

மருத்துவமனைகளில் மருந்துத் தட்டுப்பாடு நிலவுகிறது. மறுபக்கம் விவசாயிகளின் நெல்லுக்கு உரிய விலை இல்லை. உரமில்லை. இவ்வாறு ஏராளமான பிரச்சினைகள் எழுந்துள்ளன. எவற்றுக்கும் இந்த அரசில் தீர்வில்லை - என்றார். (ச-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இ. போ. ச. வெற்றிடங்களுக்கு பெண்கள் உள்ளீர்ப்பு

**கொழும்பு, ஜுலை 20**
**50 பெண் சாரதிகள், நடத்துநர் பதவிகள் உட்பட 750 வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை போக்குவரத்து சபை ஆட்சேர்ப்புச் செய்துள்ளது.**

அதன்படி, 425 சாரதிகள் மற்றும் 275 நடத்துநர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ளனர். இலங்கை போக்குவரத்து சபையின் துணை பொது மேலாளர் (நிர்வாகம்) இந்திகா குலதிலக இதுகுறித்துத் தெரிவிக்கையில்,
இவர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள். எதிர்காலத்தில் அவர்களின் சேவைகள் நிரந்தரமாக்கப்படும்.
இலங்கை போக்குவரத்து சபையால் பெண் சாரதிகள் மற்றும் நடத்துநர்களை ஆட்சேர்ப்புச் செய்வது நீண்ட வரலாற்றின் பின்னர் நடைபெறுகிறது.
இந்த ஆட்சேர்ப்புகளின் பிரதான நோக்கம் கிராமப்புற பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதாகும். 18 முதல் 45 வயதுக்குட்பட்டவர்கள் இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன் இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## வெளிநாடுகளிலிருந்து வரும்போதே 'லைசென்ஸ்'

கொழும்பு, ஜுலை 20
வெளிநாடுகளிலிருந்து இலங்கை வருவோர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் வசதி அறிமுகம் செய்யப்படவுள்ளது.
எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் முதல் இந்த வசதி விமான நிலையத்தில் அறிமுகம் செய்யப்படும் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.
இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்தார்.
இந்தத் திட்டத்தின்கீழ், 14 நாள்கள் அல்லது 30 நாள்களுக்கு செல்லுபடியாகும் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள், சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்படும். அத்துடன் இலங்கையில் நீண்டகாலம் தங்கியிருக்கும் சுற்றுலாப்பயணிகளுக்கு 8 ஆண்டுகளுக்குச் செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான வாய்ப்பும் வழங்கப்படும் என்றும் ஆணையாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## காணித் தகராறில் பறிபோனது உயிர்


கொழும்பு, ஜுலை 20
இளம் யுவதி ஒருவர் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.
இந்தக் கொடூர சம்பவம் அம்பாந்தோட்டை, கட்டுவனைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.
காணித் தகராறில் உறவினர்களுக்கிடையிலான வாள்வெட்டு மோதலில் சிக்கியே மேற்படி யுவதி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
22 வயது யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் உயிரிழந்த யுவதியின் உறவினர்கள் மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## 323 கொள்கலன்கள் விடுவிப்பு விசாரணை வேகம் போதாது!

### உதய கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, ஜுலை 20
துறைமுகத்திலிருந்து பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய 323 கொள்கலன்கள் தொடர்பான விசாரணை துரிதப்படுத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.
உதய கம்மன்பில இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு நேற்றுமுன்தினம் சென்றிருந்தார். கொள்கலன் விவகாரம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளின் விசாரணை தொடர்பாக அறிவதற்காகவே அவர் அங்கு சென்றிருந்தார்.
அதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட உதய கம்மன்பில தெரிவித்ததாவது:-
சர்ச்சைக்குரிய கொள்கலன் விடுவிப்பு மோசடி தொடர்பில் கடந்த மாதம் 2ஆம் திகதி முறைப்பாடு செய்திருந்தேன். தற்போது ஒன்றரை மாதம் கடந்துவிட்டது. எனினும், இந்த முறைப்பாடு விடயத்தில் எவ்வித முன்னேற்றமும் எமக்கு தென்படவில்லை.
முறைப்பாட்டில் சாட்சியங்களையும் முன்வைத்திருந்தோம். எனினும், பழைய கொள்ளையர்களைபிடிப்பதில் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு தற்போது பிஸியாக உள்ளதுபோல் தெரிகின்றது.
சிறிய சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை நிறுத்திவிட்டாவது, கொள்கலன் விவகாரம் பற்றி துரிதமாக விசாரணை நடத்தவேண்டும் என்று கோருகின்றோம்.
கொள்கலன்கள் விடுவிப்பு நடந்து ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. துறைசார் அமைச்சர் இன்னமும் சுதந்திரமாக உள்ளார். தேசிய மக்கள் சக்தியினருக்கு எதிராகச் சட்டம் செயற்படாதா- என்றார். (ஏ-44)







## தெற்காசிய சம்பியன்ஷிப் இந்திய முதியவர் சாதனை

சென்னை, ஜுலை 20
தென்னிந்திய மாஸ்டர்ஸ் தடகள விளையாட்டுச்சங்கம் நடத்திய தெற்காசிய திறந்த தடகள சம்பியன்ஷிப்பில் இந்தியாவைச் சேர்ந்த வேலாயுதப்பிள்ளை என்பவர் சாதனை படைத்துள்ளார்.
75 வயதுக்கு மேற்பட்டோருக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் 3ஆம் இடத்தையும், 5 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் 3ஆம் இடத்தையும், 300 மீற்றர் தடைதாண்டி ஓடும் போட்டியில் 2 ஆம் இடத்தையும் அவர் பெற்று சாதனை படைத்துள்ளார். (ஏ-26)

# மயிலிட்டி பேச்சியம்பாள் மஹோற்சவம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுலை 20
மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலயத்தின் நான்காவது வருடாந்த மஹோற்சவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் வெகுசிறப்பான முறையில் ஆரம்பமாகியுள்ளது.
மஹோற்சவத்தின் 8ஆம் நாளான எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத்திருவிழாவும், சனிக்கிழமை சப்பரத்திருவிழாவும், 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10ஆம் நாள் தேர்த்திருவிழாவும் இடம்பெற்று 28 ஆம் திகதி திங்கட்கிழமை சமுத்திரத் தீர்த்தம் இடம்பெற்று அன்றைய தினம் மாலை 6 மணிக்கு கொடியிறக்கம் இடம்பெறவுள்ளது.
இதேவேளை போர்க்கால இடப்பெயர்வின் போது முன்னைய ஆலயம் முற்றிலுமாக அழிக்கப்பட்டிருந்த நிலையில் மீள்குடியேற்றத்துக்குப் பின்னர் மக்களின் முழுமையான நிதிப்பங்களிப்பில் பேச்சியம்பாளுக்கு புதிதாக ஆலயம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் திரைப்பட விழா

யாழ்ப்பாணம், ஜூலை 20
யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டுத் திரைப்படவிழா கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. நாளை திங்கட்கிழமை வரையான ஐந்து தினங்கள் அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இந்த விழா இடம்பெறவுள்ளது. விழாவில் ஜப்பான், வியட்நாம், செனகல், துருக்கி, இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் முழுநீளத் திரைப்படங்கள் ஆறும், ஆவணப்படமொன்றும் ஆங்கிலத் துணைத் தலைப்புகளுடன் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்த நிலையில் இன்று முற்பகல்10 மணியளவிலும், மாலை 4.30 மணியளவிலும், நாளை திங்கட்கிழமை மாலை 4.30 மணியளவிலும் காட்சிகள் இடம்பெறும். இலவசக் காட்சியாக இடம்பெறவுள்ள மேற்படித் திரைப்பட விழா 1979 - 1981 வரை செயற்பட்ட முன்னோடிக் கழகமான யாழ்ப்பாணத் திரைப்படவட்டத்தின் தலைவர் மறைந்த ஏ.ஜே. கனகரத்தினா, உலகத் திரைப்படங்கள் பற்றிய எழுத்துகளின் முன்னோடியான மறைந்த கே.எஸ். சிவகுமாரன் ஆகிய மூத்த செயற்பாட்டாளர்கள் இருவருக்கும் சமர்ப்பணம் செய்யப்படவுள்ளன. (ச-66)



அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி முத்தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் முத்தமிழ் விழா, அதிபர் அருட்சகோதரி மேரி ஜெயமலர் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-25,9)

### சாட்டிக் கடற்கரையில்

## சாதாளைகளை அகற்றி பசளைக்காக விற்பனை

யாழ்ப்பாணம், ஜூலை 20
சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்குடன் வேலணை சாட்டிக் கடற்கரையோரத்தில் காணப்படும் சாதாளைகளை அப்புறப்படுத்தி அவற்றைப் பசளையாக குறைந்த விலையில் மக்களிடம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தை வேலணைப் பிரதேசசபையின் தவிசாளர் அசோக்குமார் தெரிவித்துள்ளார்.

இந்தக் கடற்சாதாளைகளைப் பெற விரும்புவோர் வேலணைப் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு கட்டணங்களைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-27)

# மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 09 . 1934



மறைவு
16 . 07 . 2025

**திரு மயில்வாகனம் பத்மநாதன் (பேபி)**

(முன்னாள் பரந்தன் இரசாயன கூட்டுத்தபான களஞ்சிய முகாமையாளரும், Mcsons (காவடி மார்க் கற்பூரம்), Sun Power Systems பதவிநிலை உத்தியோகத்தரும்)

கொடிகாமம் வெள்ளாம்போக்கட்டியை பிறப்பிடமாகவும், இலக்கம் 06, 3/5, ஐ.பி.சி. வீதி, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் பின்னர் துபாயில் வசித்து வந்த திரு. மயில்வாகனம் பத்மநாதன் (பேபி) அவர்கள் (16-07-2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்தியநாதன்-நைமிசாரணியநாயகி (நல்லபிள்ளை) தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற புஷ்பவதியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி வைத்திலிங்கம், சரஸ்வதி ஞானசம்பந்தன், மயில்வாகனம் இராமநாதன், மயில்வாகனம் இராசநாயகம், அனுஷ்யாதேவி கோடீஸ்வரன், சாவித்திரி உமாமகேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கேதீசன், செந்தூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிபி மத்தியூஸின் அன்பு மாமனாரும், அவிராவின் பாசமிகு பாட்டாவும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் 18-07-2025 மதியம் துபாய் ஜபல் அலி, நியூ சொனப்பூர் இந்து மயானத்தில் நடைபெற்றது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
மகன்கள்
கேதீசன், செந்தூரன்
071 742 0420, 97155 899 5703

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 09 . 1977



மறைவு
19 . 07 . 2025

**கெங்காதரன் சிவபாலன்**

(Sivakenga Engineering உரிமையாளர் - கனடா)

காரைநகர் தங்கோடை நாவற்கண்டியை பிறப்பிடமாகவும், மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கெங்காதரன் சிவபாலன் அவர்கள் நேற்று (19.07.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கெங்காதரன் (முன்னாள் தொழில்நுட்பவியலாளர் Railway Department) - தனலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், மகேஸ்வரன் (இளைப்பாறிய அதிபர்) - இராஜேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சியாமளாவின் அன்புக் கணவரும், விஷ்ணுகன் (யாழ் இந்துக்கல்லூரி), ஜஸ்விகா (சென் ஜோன் பொஸ்கோ) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோகிலராஜ் (Police உத்தியோகத்தர்), போதநிதி (Research Assistant, யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு அத்தானும், ஆரணி, லஜீகரன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஹிருத்திக்கின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (21.07.2025) திங்கட்கிழமை இல. 34, மாரியம்மன் வீதி, திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 624 4796 (மனைவி)
076 428 9263 (அப்பா)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம்
16 . 02 . 1953



மறைவு
16 . 06 . 2025

**சின்னத்துரை பேரின்பநாதன்**

இராசவீதி கோப்பாய் மத்தியை பிறப்பிடமாகவும், பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை பேரின்பநாதன் அவர்கள் கடந்த (16.06.2025) திங்கட்கிழமை அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார் காலம்சென்ற சின்னத்துரை - ஞானரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், தனநாயகி, காலம்சென்ற கந்தசாமி, உதயகுமாரன் ஆகியோரின் அன்பு சகோதரனும், சுரேஸ்காந், ரஜிக்காங், யதுகரன், லோஜிதா ஆகியோரின் பெரியதகப்பனும், முரளிதரன், துளசிதரன், ஜனார்த்தனன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2025) ஞாயிற்றுக்கிழமை இராசவீதி கோப்பாய் மத்தியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கந்தன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அவனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








ஆடம்பர வாழ்க்கையின் ஆரம்பத்தை
எல்லா நாட்களிலும் உணர விருப்பமா?

ஷெரின் விலாஸ் என்பது அன்றாடம் உங்களுக்கு இந்த அனுபவத்தை வழங்க வடிவமைக்கப்பட்ட ஒரு சமூக விலாவாகும்.
நேர்த்தியாக வடிமைக்கப்பட்ட 3 அல்லது 4 படுக்கையறைகள், ஒவ்வொரு தனிப்பயன்பாட்டிற்கான பிரத்தியேக தடாகங்கள், நவீன சமையலறைகள் மற்றும் ஏனைய முன்னணி வாழ்வியல் வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

யாழ் நகரின் மத்தியிலிருந்து சில நிமிட தூரத்திலும், கரையோரத்தை அண்மித்ததாகவும் அமையப்பெற்றுள்ளது.
ஷெரின் வில்லாஸ் உங்களின் சுபீட்சமான நல்வாழ்விற்கு வடிமைக்கப்பட்டுள்ளது.

+94 77 818 8081 | +44 78 0109 9741
www.beachsideresorts.lk/serenevilla/

# விற்பனை பிரதிநிதி

(புத்தளம்/அம்பாறை/யாழ்ப்பாணம்/வவுனியா/திருகோணமலை)

**தகுதிகள்**

- 20 முதல் 40 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.
- இதே துறையில் குறைந்தபட்சம் 02 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் - B2B அனுபவம் கூடுதல் தகுதியாக கொள்ளப்படும்.
- FMCG துறையில் அனுபவம் இருப்பது கூடுதல் நன்மையாக இருக்கும்
- சாரதி அனுமதிப்பத்திரம் உடையவராக இருப்பது அவசியம்

அனுபவம் மற்றும் தகுதிகளின் அடிப்படையில், சரியான விண்ணப்பதாரருக்கு நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய கவர்ச்சியான ஊதியம் காத்திருக்கிறது. 14 நாட்களுக்குள், உங்கள் CV-ஐ careers@smrconsolidated.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இரண்டு உறவினர்கள் அல்லாத பரிந்துரையாளர்களின் விபரங்களுடன் அனுப்பவும்.

சேனா மில்ஸ் சுத்திகரிப்பு நிலையங்கள் (Pvt) LTD
இல 40, புதிய களனி பாலம் சாலை (பேஸ் லைன் சாலை), ஒருகொடவத்தை, வெல்லம்பிட்டி, கிரேட்டர் கொழும்பு, இலங்கை

+94 76 7039 288

N & G Ads

## சிறந்த நிலம் விற்பனைக்கு!

- மீசாலை கிழக்கு — வீட்டு நிலம்
- அல்லாரை தெற்கு — வீட்டுடன் தென்னங்காணி
- கச்சாய் (புங்கடி) — வயல், தென்னங்காணி

விலை பேசத்தக்கது

தொடர்பு 0776 544 540

## காணி உடனடி விற்பனைக்கு

அரியாலை மணியந்தோட்டத்தில்
3 பரப்பு காணி
தென்னைகளுடன் உடனடி
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 666 5628

## The Royal College of Jaffna

தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை
ஆண்டு 10. O/L, A/L சிறுகுழுக்களாக
அனுபவம் மிக்க ஆசிரியர்கள் மூலம்
வகுப்புகள் மற்றும் Spoken English
வகுப்புகள்

பிரான்பற்று வீதி. சங்கானை
தொடர்பு: 077 675 1649

## வீடு வாடகைக்கு

நல்லூர் மிக அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீட்டின் மேல்மாடி - வாகனத் தரிப்பிடம், 5அறைகள். கோள், கிச்சின் உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 350 1812

## வேலைக்கு ஆட்கள் தேவை

தனியார் நிறுவனமொன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
Book Keeper (பெண்)

- குறித்த துறையில் முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- 35 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
- Set of Books, EPF/ ETF, Salary ஆகிய வேலைகள் செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

இடம் - யாழ்ப்பாணம் (மல்லாகம்)

(CS/58896) J-1

தொடர்புகளுக்கு:- 077 927 1122 Whatsapp
021 224 5755
077 368 6129

## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் பல சரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டிற்கு கீழ் காணும் ஆட்கள் தேவை.

1. Manager (2 years experience)
2. Administration
3. Computer billing + cashier
4. Sales assistant
5. Driver - AD licence
6. Packing - பொதியிடல்
7. Part time - 05.00 p.m - 10.00 p.m

வயது எல்லை - 18 - 35
யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது

077 419 5209, 077 419 5218

## வல்வை முதியோர் இல்லம்

வீட்டுச் சூழலில் கனிவு நிறைந்த உபசரிப்புடன் சுகாதாரமாகத் தயாரிக்கப்பட்ட நிறை உணவு வழங்குகின்ற வல்வை முதியோர் இல்லம் புதிய முதியவர்களை இணைப்பதற்கு தயாராக உள்ளது.
இல்லத்தில் இணைய விரும்பும் முதியவர்கள்
எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
www.valvaieldershome.com

நிர்வாகி:- 077 810 6857
075 974 2495
021 226 5551

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் மோட்டார் வாகன விற்பனை, உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை

(CR 46563) E

தொடர்பு: 077 363 6129, 077 363 6005

## மணமகள் தேவை

பூரட்டாதி நட்சத்திரம் 3[ம்] பாதம்
1985[ம்] ஆண்டு பிறந்த
மணமகனுக்கு மணமகள்
தேவை.

தொடர்புகளுக்கு:
077 027 6702

## வீட்டு பணிப்பெண் தேவை

யாழ் நகரில் ஐந்து பேர் கொண்ட குடும்பமொன்றிற்கு தங்கி நின்று வேலை செய்ய பணிப்பெண் தேவை
சம்பளம் : 60 000 /=
வயதெல்லை : 35 - 55
உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்

தொடர்புகளுக்கு:
075 498 5400
077 937 0000


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனஉறுதியுடன் செயல்படுவீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** சிலருக்கு தாய்மாமன் வகையில் எதிர்பார்த்த காரியம் அனு கூலமாக முடியும். தாயின் விருப்பத்தை பூர்த்தி செய்வீர்கள். ஆனால், உடல் நலனில் கவனம் தேவை. அலுவலகத்தில் பணிச்சுமை இருந்தாலும், சக ஊழியர்களின் உதவியுடன் முடித்துவிடுவீர்கள்.

**மிதுனம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**கடகம்:** இளைய சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கைத் துணை வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்கள் வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு பிரச்னைகள் ஏற்படக் கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. திடீர் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும்

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்படும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**தனுசு:** மாலையில் பள்ளி, கல்லூரிக்கால நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும். மூலம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மகரம்:** பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். முடிந்தவரை அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள்.

**கும்பம்:** மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். சகோதரர்களால் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். ஆனால், தாயின் அன்பு ஆறுதலாக இருக்கும்.

**மீனம்:** வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்துடன் உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.



யாழ்ப்பாணத்தில்



# சுவாமி விபுலானந்தரின் நூற்றாண்டு விழா விமரிசை

யாழ்ப்பாணம், ஜூலை 20

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழா மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நேற்றுச்சனிக்கிழமை இடம்பெற்றது.

புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ். மாவட்டச் செயலகம், யாழ். பிரதேச செயலகம் , அகில இலங்கை இந்துமாமன்றம், யாழ். தமிழ்ச்சங்கம் ஆகியன இணைந்து இந்தத் துறவற நூற்றாண்டு விழாவை நடத்தியிருந்தன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன கலந்துகொண்டதுடன் வடக்கு ஆளுநர் நா. வேதநாயகன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெ. ரஜீவன், சி.ஸ்ரீபவானந்தராஜா, யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் உள்ளிட்டோருடன் பிரதேச செயலர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

விபுலானந்தரின் துறவற நூற்றாண்டை முன்னிட்டு தபால் திணைக்களத்தால் நினைவு முத்திரை வெளியிடப்பட்டது. "விபுலானந்த அடிகள்" எனும் நூலும் வெளியிடப்பட்டதுடன் நினைவுப் பரிசும் விருந்தினர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. (ச-25,27-66)



# நிறுத்திவைத்த சைக்கிள் திருட்டு

## யாழில் துணிகரம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணம் நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள தனியார் கல்வி நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று நேற்றுச் சனிக்கிழமை திருடப்பட்டுள்ளது.

குறித்த கல்வி நிலையத்துக்கு கல்வி கற்க வந்த மாணவர் ஒருவருடைய சைக்கிளே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது. நபரொருவர் உள்ளே நுழைந்து சைக்கிளைத் திருடிச்செல்லும் காட்சி அங்கிருந்த சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது.

பாதிக்கப்பட்ட நபரால் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளநிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-27)

# இந்தியர்கள் 21 பேர் கைது

கொழும்பு, ஜூலை 20

கிருலப்பனைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 21 இந்தியப் பிரஜைகள் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டனர்.

விசா காலாவதியான பின்னரும் சட்டவிரோதமாக தங்கியிருந்து இணையவழி சூதாட்ட மோசடியை அவர்கள் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. (ச-இ)

## முதல்வர், பிரதிமுதல்வர் இருவராலும்

# வவுனியா மாநகரசபைக்கு பெரும் இடையூறு

### உறுப்பினர் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூலை 20

வவுனியா மாநகரசபையின் முதல்வரும் பிரதி முதல்வரும் தனக்கு அரசியல் ரீதியான பழிவாங்கலை மேற்கொண்டு தொழில்செய்வதற்கு இடையூறை ஏற்படுத்துகின்றனர் என இலங்கை தொழிலாளர் கட்சியின் வவுனியா மாநகரசபை உறுப்பினர் பாருக் பர்ஸ்சான் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வவுனியா மாநகரசபைக்குட்பட்ட மாடு அறுக்கும் தொழுவம் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வவுனியா மாநகரசபையில் முதல்வருக்கு எதிராக வாக்களித்தமையால் எனது தொழில்மீது அரசியல் பழிவாங்கல் மேற்கொள்ளப்படுகின்றது.

மாநகரசபைக்குட்பட்ட தாண்டிக்குளம் மாட்டுத் தொழுவத்தின் குத்தகைதாரர் என்ற அடிப்படையில் வருடாவருடம் சபைக்குச் செலுத்த வேண்டிய தொகையை உரியவாறு செலுத்தியேவருகின்றேன்.

சபை ஆரம்பித்து சில நாள்களிலேயே மாநகரசபை உத்தியோகத்தர்களின் பங்களிப்பு இல்லாமல் சபையின் பிரதிமுதல்வர் தனிப்பட்ட ரீதியில் மாட்டுத் தொழுவத்துக்குச் சென்று எனக்கு கீழ் பணிபுரியும் ஊழியர்களை புகைப்படம் எடுத்தார். அவற்றை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு மாட்டுத்தொழுவம் தூய்மை இல்லாமல் இருப்பதாக தெரிவிக்கின்றனர். அந்தத் தொழுவம் முற்றுமுழுதாக மாநகரசபைக்கே உரியது. நாங்கள் அதனைக் குத்தகைக்கே எடுத்துள்ளோம். எனவே அதுதொடர்பான அனைத்து விடயங்களும் மாநகரசபையே செய்துதரவேண்டும்.

தற்போது சபையின் முதல்வர் புதிய ஒரு அறிவிப்பை விடுத்துள்ளார். இங்கிருந்து கொழும்பு உட்பட வெளிமாவட்டங்களுக்கு இறைச்சி கொண்டுசெல்லக்கூடாது எனவும் உயிருடன் மாடுகள் கொண்டுசெல்லக்கூடாது என்றும் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக முதல்வரிடம் கேட்டபோது, நான் சொல்வது தான் சட்டம். நான் நினைத்தால் தொழுவத்தை திறக்கவும், மூடவும் முடியும் என்று பொறுப்பில்லாமல் பதில் அளிக்கிறார்.

வெளிமாவட்டங்களுக்கு இறைச்சியை அனுப்பும்போது மாநகரசபைக்கு செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தியே அவற்றை அனுப்புகின்றோம். பராமரிப்புப் பணிகளையும் நாங்களே செய்கிறோம். எனவே எம்மீது ஏற்படுத்தப்படும் இடையூறுகளை அரசியல் பழிவாங்கலாகவே பார்க்க வேண்டியுள்ளது. நேற்றுமுன்தினம் மாலை தொழுவத்தின் மின்சாரம் தடைப்பட்டது. இன்று காலை வரை எமக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. சபைமுதல்வரின் நல்ல திட்டங்களுக்கு நாங்கள் எப்போதும் ஆதரவு அளிப்போம். ஆனால் பழிவாங்கல்கள் ஆகாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.16 மில்லியன் நிதியொதுக்கீட்டில் மன்னாரில் 'கடற்கரைப் பூங்கா'

## வேலைத்திட்டப் பணிகள் ஆரம்பிப்பு

**மன்னார், ஜூலை 20**

**மன்னார் நகர நுழைவாயிலில் பிரதான பாலத்துக்கு அருகாமையில் கடந்த வருடம் 'நகரக் கடற்கரைப் பூங்கா' அமைக்க அடிக்கல் நடப்பட்டநிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை முதற்கட்டப் பணிகள் வைபவ ரீதியாக ஆரம்பித்துவைக்கப்பட்டன.**



வடமாகாண சுற்றுலாப் பணியகத்தினால் குறித்த கடற்கரைப் பூங்கா அமைக்க 16 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 6 மில்லியன் ரூபா நிதிக்கான வேலைத்திட்டங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டன.
மிகுதி 10 மில்லியன் ரூபாவுக்கான வேலைத்திட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப் படவுள்ளது.
மன்னார் நகரசபைக்குக் குறித்த இடம் வழங்கப்பட்டுள்ளநிலையில் குறித்த வேலைத்திட்டத்தை நிறைவுறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
ஆரம்ப நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன், மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதப், மன்னார் நகரசபையின் செயலாளர், இராணுவ அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-41-56)





## பேரணியும் கண்காட்சியும்

கிளிநொச்சி, ஜூலை 20
சர்வதேச திறன் விருத்தி தினத்தை முன்னிட்டு இலங்கை ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலையத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வுப் பேரணியும் கண்காட்சியும் கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றன.
ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள், மாவட்டத்திலுள்ள உயர்கல்வி அமைச்சின் கீழுள்ள நிலையங்களின் மாணவர்கள் ஆகியோரால் கிளிநொச்சி டிப்போச்சந்தியிலிருந்து ஜேர்மன் தொழிற்பயிற்சி நிலையம்வரை அதாவது சுமார் ஏழு கிலோமீற்றர் வரை விழிப்புணர்வுப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.
தொடந்து ஜேர்மன் தொழிற்பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களின் கண்காட்சி நடைபெற்றது. குறித்த நிகழ்வில் அமெரிக்கா கலிபோர்னியா மாநில பல்கலைக்கழக இயந்திரப் பொறியியல் இணைப் பேராசிரியர் அஜித் வீரசிங்க, யாழ்.பல்கலைக்கழக பொறியியல் பீட மின்னணுப் பொறியியல் துறைப் பேராசிரியர் தர்மராஜா திருவாரன், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆர். வள்ளுவன், அரச உத்தியோகத்தர்கள், தொழிற்பயிற்சி நிறுவன உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-113)

### மன்னார் நகரசபை

## முன்னாள் - இந்நாள் முதல்வர்கள் மோதல்

மன்னார், ஜூலை 20
மன்னார் நகரசபையின் முன்னாள் முதல்வர், தற்போதைய நகரசபையின் முதல்வர் டானியல் வசந்தன் மற்றும் நகரசபை உறுப்பினர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் ஆகியோர் சபை அமர்வின் போது நாவடக்கமின்றி மோதிக்கொண்டனர்.
மன்னார் நகரசபையின் கன்னியமர்வு கடந்த 9ஆம் திகதி இடம்பெற்றபோது சபையில் தொடர்ந்தும் உறுப்பினர்களுக்கிடையில் கருத்துமுரண்பாடு ஏற்பட்டதையடுத்து சபை முதல்வரினால் அமர்வு ஒத்திவைக்கப்பட்டது. இந்தநிலையில் குறித்த அமர்வின் தொடர்ச்சியாக கடந்த வியாழக்கிழமை மீண்டும் சபை கூட்டப்பட்டது. இதன்போதே மூவருக்குமிடையே தொடர்ச்சியாகக் கருத்து முரண்பாடு ஏற்பட்டு வாய்த்தர்க்கமாக மாறியது. குறித்த இருவரும் நாவடக்கமின்றி மாறி மாறி குற்றச்சாட்டுகளை முன்வைத்து வந்தனர். இதனால் சபை அமர்வில் சிறிதுநேரம் அமைதியின்மை ஏற்பட்டது. (ச-56)





## தேர்தல் விடயங்கள் கலந்துரையாடல்

மன்னார், ஜூலை 20
வாக்கெடுப்பு நிலையங்களுக்கான உட்பிரவேசித்தல் வசதி மற்றும் அதன் தன்மை தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவும், பவ்ரல் அமைப்பும் இணைந்து மேற்கொள்ளும் ஆய்வுக்காக மன்னார் மாவட்ட அரசியற்கட்சிப் பிரமுகர்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் மன்னாரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் கே.முகுந்தன், பவ்ரல் அமைப்பின் தேசிய அமைப்பாளர் சுஜீப கஜநாத் ஆகியோர் பங்கேற்றனர். (ச-25, 56)




## கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20
பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மாணவி ஜெகதீஸ்வரன் நிரோஜா 9ஏ சித்திகளைப் பெற்ற சாதனையைப் பாராட்டும் முகமாக அவருக்குக் கடந்த செவ்வாய்க்கிழமை கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.
பாடசாலை அதிபர் பா.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கல்வித் திணைக்களத்தின் சங்கீத ஆசிரிய ஆலோசகர், கிராம உத்தியோகத்தர் ந.சிவரூபன், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழையமாணவர் சங்கத்தினர், மலரும் மூளாய் அபிவிருத்தி அமையத்தினர், பாடசாலை முன்னாள் அதிபர், பொது அமைப்பின் பிரதிநிதிகள், நலன்விரும்பிகள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-41-27)

கனடாவில் வசிக்கும் மனிதநேய சமூகச் செயற்பாட்டாளர் காமலிற்றா, ப்ரீத்தி பவுண்டேஷனூடாக உறவு காப்போம் செயற்றிட்டத்தின்கீழ் கே.கே.பி. இளைஞர் கழகத்துக்கு வழங்கிய நிதிப்பங்களிப்பில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கல்விகற்கும் 190 மாணவர்களுக்கு பாதணிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-27)





## வீரமக்கள்தின இறுதிநாள் நிகழ்வுகள் அனுஷ்டிப்பு

வவுனியா, ஜூலை 20
தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின் 36ஆவது வீரமக்கள் தினத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை கடைப்பிடிக்கப்பட்டன.
இதன்போது வவுனியா மணிக்கூட்டுகோபுரச் சந்தியில் அமைந்துள்ள க.உமாமகேஸ்வரனின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து ஏனைய நிகழ்வுகள் வவுனியா கோயிற்குளத்தில் அமைந்துள்ள க.உமாமகேஸ்வரன் இல்லத்தில் இடம்பெற்றது. (ச-41-110-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தால் கிளிநொச்சி, முல்லைத்தீவில் 3,20,000 கிலோ நெல் கொள்வனவு



**கிளிநொச்சி, ஜுலை 20**
**கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இதுவரை 3 இலட்சத்து 20 ஆயிரம் கிலோகிராம் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் வடபிராந்திய பதில் முகாமையாளர் த. கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் கடந்த தினங்களில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே குறித்த விடயத்தை அவர் தெரிவித்தார்.

சிறுபோக அறுவடை நெல்லை விவசாயிகளிடம் இருந்து நெல் சந்தைப்படுத்தல் சபை நிர்ணய விலைக்கு அமைய கொள்வனவு செய்கின்ற நிலையில் வடமாகாணத்திலும் கொள்வனவுக்காக களஞ்சியசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. இந்த வருடம் அரசாங்கத்தினால் ஈர நெல்லும் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று முகவராக இணைந்து ஈர நெல்லை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்து உலரவைத்து திரும்ப ஒப்படைக்கவேண்டும். ஈர நெல்லு நாடு ஒரு கிலோ 102 ரூபாவாகவும், சம்பா 105ரூபாவாகவும், கீரிச்சம்பா 112 ரூபாவாகவும் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் கொள்வனவு செய்து உலரவைத்து மீள வழங்கும்போது, கூலி மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவும் கிடைக்கின்றது. எனவே சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் - என்றார். (ச-25,113)



## புதுக்குடியிருப்புத் தவிசாளரால் ஆளுநரிடம் மனு கையளிப்பு

முல்லைத்தீவு , ஜுலை 20
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசசபையின் தேவைப்பாடுகள் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் பிரதேசசபை தவிசாளர் வே. கரிகாலன் மற்றும் தமிழரசுக் கட்சி மத்தியகுழு உறுப்பினர் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோர் வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகனிடம் மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.
ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற சந்திப்பின்போது இந்த மனு கையளிக்கப்பட்டது. (ச-25, 66, 19, 113)




## தேசிய தொழிற்தகைமைச் சான்றிதழ் வழங்குதல்

யாழ்ப்பாணம், ஜுலை 20
தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் பயிற்சிநெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கான தேசிய தொழிற்தகைமை சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.
தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஆர். திருமுருகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்டச்செயலர் ம. பிரதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 9)



மாமுனை ஸ்ரீ நாகதம்பிரான் திருக்கோயில் சாந்திக அலங்கார உற்சவத்தின் 2ஆம் நாள் உற்சவமான வேதபாராயணத் திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்புற இடம்பெற்றது. (ச-41-100)

## நயினை அம்மனுக்கு ஆடிப்பூரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜுலை 20
நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய ஆடிப்பூரத் திருவிழா நேற்றுச் சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது.
தினமும் காலை விஷேட அபிஷேகங்களைத் தொடர்ந்து பூஜை, தீபாராதனை, பாராயணம், திருவூஞ்சல் என்பன இடம்பெற்று தாமரைப்பூ பீடத்தில் எழுந்தருளி அம்மன் வீதியுலாவரும் காட்சி இடம்பெறும். (ச-25)



## ஆக்கத்திறன் கண்காட்சி

கிளிநொச்சி, ஜுலை 20
கிளிநொச்சி வடக்கு வலயத்துக்குட்பட்ட தர்மபுரம் அ.த.க பாடசாலையில் ஆக்கத்திறன் கண்காட்சி பள்ளி முதல்வர் ப.தவனேசன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக ஹம்சத்தனி பிரதிக் கல்விப் பணிப்பாளர் வினோதன், சிறப்பு விருந்தினராக ஜெ.ஞானசீலன், உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25,113)

## முத்தமிழ் விழா



யாழ்ப்பாணம், ஜுலை 20
அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் முத்தமிழ் மன்றம் முன்னெடுத்த முத்தமிழ் விழா அதிபர் அருட்சகோதரி ரி.ஜெயமலர் தலைமையில் கடந்த புதன்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.
நிகழ்வில் யாழ்ப்பாணம் கல்வி வலய தமிழ்ப்பாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.இராஜமோகன் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி. சந்திரமௌலீசன் லலீசன் சிறப்பு விருந்தினராகவும், முன்னாள் அதிபர் அருட்சகோதரி மேரி எத்தல் வீவா, தமிழ்ப்பாட சேவைக் கால ஆசிரிய ஆலோசகர் இ.குணேஸ்வரி, கார்மேல் கன்னியர் சபை மூத்த அருட்சகோதரி.திரேசா ராணி ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## இறவாத இடதுசாரித்துவம்!

'சிங்களக் கட்சிகள்மூலம், தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது. எனவே, உள்நாட்டுப் பொறி முறை என்ற பேச்சுவார்த்தைகளைக் கைவிட்டு, சர்வதேச விசாரணை ஊடாகவே நீதி நிலை நாட்டப்படவேண்டும்' என்றவாறாகத் திட்ட வட்டமாக வலியுறுத்தியிருக்கின்றார் ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய. அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியற்கைதிகளின் விடுதலை மற்றும் செம்மணிப் புதைகுழி உள்ளிட்ட விடயங்களில், தமிழ்த் தலைவர்களுக்கு நிகராக (நேர்மையாகச் சொல்வதானால், தமிழ்த் தலைவர்களுக்கு மேலாகச் சென்று) தனது நிலைப் பாட்டையும், வலியுறுத்தலையும் முன்வைத்திருக் கின்றார் அவர்.

ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய, இலங்கையில் உள்ள மிகச் சிறந்த இடதுசாரிச் சிந்தனையாளர். அவரது அரசியல் சித்தாந்தம் என்பது சமூக சமத்துவத்தை ஆதரிக்கின்ற அல்லது அதை ஏற்றுக்கொள்கின்ற போக்கு. ஆதலால், சிறிதுங்க ஜயசூரிய இத்தகைய கருத்துகளை வெளிப்படுத்தியிருப்பதில் ஆச்சரியத்துக்கு ஒன்றுமில்லை. அவருடைய கருத்துகள் ஒவ்வொன்றும் ஆழ்ந்து நோக்கப்பட வேண்டியவை. அநுரவின் ஆட்சிக்காலத்தில் சிறுபான்மை மக்களுக்கு நீதி கிட்டும் என்பது போன்ற தோற்றப்பாட்டை வலிந்து ஏற்படுத்து வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில், சிறிதுங்க ஜயசூரியவின் கருத்துகள், காலத்தேவையான காத்திரமான நடவடிக்கை களாகவும் அமைந்துள்ளன.

இனவாதச் சக்தி நிறைந்த இலங்கை போன்ற தொரு நாட்டில் இடதுசாரிகளின் குரல்கள் ஓங்கி ஒலிக்கவேண்டும். தமிழர்களின் இனப்பிரச்சினை கள் மற்றும் இதர விடயங்கள் தொடர்பில் தீர்வைத் தேடிக்கொண்டிருக்கும் தமிழ்த் தலைமைகள் தமது அரசியலோட்டத்தில் திஸ்ஸ விதாரண, டியூ குணசேகர, விக்கிரமபாகு கருணா ரட்ண, சிறிதுங்க ஜயசூரிய போன்ற இடதுசாரி ஆளுமைகளுடன் ஒன்றித்துப் பயணப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இராஜதந்திரத்தைப் பொறுத்தமட்டில் 'நாங்கள் பலவீனமான பாதை யூடாகவே பயணப்பட்டோம், தற்போதும் அதே போலவே பயணப்பட்டு வருகின்றோம்' என்பதே வரலாறு. பெரும்பான்மை மக்களுடன் இணைந்து எம் கோரிக்கைகளை வலியுறுத்துகின்றபோது அது செவிசாய்க்கப்படுவதற்கு வாய்ப்புகள் மிகை அதிகம்.

2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்படுவதற்கு முன்னர், இனப்பிரச்சினைக்கான தீர்வுக்காக முன்னெடுக் கப்பட்ட அனைத்துக்கட்சிக் கூட்டங்களுக்கு இடது சாரிகளே தலைமை தாங்கினார்கள். இந்த வரலாறுகளைத் தெரிந்திருந்தும், நாம் எம்து பயணத்தில் இடதுசாரிகளை விட்டுத் தூரம் போகின்றமை பெரும் தவறு. எனவே, இடதுசாரித் தலைவர்களை எமக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான பாலங்களாக நாங்கள் கட்ட மைக்கவேண்டும். சிறுபான்மையினரின் குரலாக அவர்களை ஓங்கி ஒலிக்கச்செய்ய வேண்டும். உலகில் பலமானதும் இறவாததுமான கொள்கை இடதுசாரிகளுடையது. அதன் தாற்பரியத்தை தமிழர்கள் உணர்வது காலத்தேவையானது.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


### நாளொரு நல்வார்த்தை

சட்டம் மதிப்புக்குரியது.
காரணம் அது சட்டம் என்பதால் அல்ல,
அதில் நியாயம் இருக்கிறது என்பதால்.

– பிரான்சிஸ் பேகன்–




## தேயிலை உற்பத்திக் கிராமம் உருவாக்குவதற்குத் திட்டம்



அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின்கீழ் ஐநூறு சிறு தேயிலை உற்பத்திக் கிராமங்கள் உருவாக்கப்படும். தேயிலையின் தரத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப் படும் என்று பெருந்தோட்ட மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச் சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார். இரத்தினபுரி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த காலங்களில் தேயிலை தொழிற்துறையை முன்னேற்றுவதாகக் குறிப்பிட்டு சர்வதேச நாடுகளில் விளம்பரங்கள் வெளியிடுவதற்காக மாத்திரம் ஆயிரத்து 965 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

உலக வங்கியிடம் மாத்திரம் 48.9 மில்லியன் டொலர் பெறப்பட்டுள்ளது. இதில் 60 வேலைத்திட்டங்கள் தோல்வியடைந்துள்ளன. இந்தத் திட்டங்களுக்காக, முன்னாள் அமைச்சர் தயா கமகேவின் மனைவி, லக்ஷ்மன் செனவிரத்னவின் மகன் மற்றும் சாலிய திசாநாயக்கவின் மனைவி ஆகியோரே பணத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர். இந்த விவகாரம் தொடர்பில் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (எ-இ)

## தலவத்துகொடவில் துப்பாக்கிச்சூடு

கொழும்பு, ஜுலை 20

தலவத்துகொடப் பகுதியில் நேற்றுக் காலை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. குறித்த பகுதியில் அமைந்துள்ள இரவு விடுதி ஒன்றின் முன்பாக இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் பதிவாகியுள்ளது. இரு குழுக்களிடையே ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியதையடுத்து, இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், தலங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)


## அநுராதபுரத்தில் விபத்து 10 பேர் காயம்

கொழும்பு, ஜுலை 20

அநுராதபுரத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

திரப்பனைப் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை லொறியொன்றுடன் வேனொன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ச-இ)





## தேசபந்துவின் விசாரணை அறிக்கை அடுத்தவாரம் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜுலை 20

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவின் அறிக்கை அடுத்த வாரம் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

பரிந்துரைகளுடன் அறிக்கை தயாரிப்பது இறுதிக் கட்டத்தில் இருப்பதாகக் குழு தெரிவித்துள்ளது. (ச-இ)



## கருணாநிதியின் மூத்த மகன் மறைவு!

சென்னை, ஜுலை 20

மறைந்த முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் மூத்த மகன் மு.க. முத்து உடல்நலக்குறைவால் சென்னையில் நேற்றுச் சனிக்கிழமை காலமானார். 1970களில் தமிழ்த் திரையுலகில் கதாநாயகனாக அறிமுகமான மு.க.முத்து, பூக்காரி, பிள்ளையோ பிள்ளை, அணையா விளக்கு, சமையல்காரன் ஆகிய படங்களில் நடித்தவர். நடிப்பு மட்டுமின்றி பாடும் திறனையும் பெற்றிருந்தார். 'நல்ல மனதில் குடியிருக்கும் நாகூர் ஆண்டவா'என்ற பாடலும், 'சொந்தக்காரங்க எனக்கு ரொம்ப பேருங்க' என்ற பாடலும் பலராலும் இன்றும் மறக்க முடியாத பாடல்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

நாளை

திங்கட்கிழமை - ஆடி 05

21.07.2025

சுபநேரம் : 12.01 - 01.31

ராகுகாலம் : 07.31 - 09.01


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## இராசரத்தினம் அமிர்தவல்லி

**(வேலணை வடக்கு, 5ம் வட்டாரம்)**

**தோற்றம்**
**30.08.1939**

**மறைவு**
**10.07.2025**

வேலணை 5ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் புளியங்கூடல், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் அமிர்தவல்லி (அமிர்தவல்லி அம்மா) அவர்கள் 10.07.2025 வியாழக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் வேலணை வடக்கு 5ம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான காராளசிங்கம் - தில்லைவனம் தம்பதிகளின் அன்பு மகளும், புளியங்கூடலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - கண்ணம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரத்தினத்தின் (பெரியதம்பி) அன்பு மனைவியும், மேகலா (கனடா), ராதிகா (ஜேர்மனி), வசந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தவலோகநாதன் (கனடா), சண்முகமூர்த்தி (ஜேர்மனி), சித்திரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பொன்னம்பலம் (கனடா) (ஓய்வுநிலை தபால்அதிபர் யாழ்ப்பாணம்), புவனேஸ்வரி (இலங்கை), மரகதவல்லி (இலங்கை), காலஞ்சென்ற பரமேஸ்வரி, இராசேஸ்வரி (கனடா), கணேசலிங்கம் (ஓய்வுநிலை கிராம சேவை உத்தியோகத்தர்-வேலணை) ஆகியோரின் அன்பு சகோதரியும், துஷேன்ந் - அமீனா (கனடா), டினோஷா (கனடா), மயூரன் (ஜேர்மனி), ஹர்னிகா (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும், ஷேன் (கனடா), ஷாரா (கனடா), அஷிஸ் (கனடா) ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான பார்வதி (புளியங்கூடல்), நடராசா (புளியங்கூடல்), திருச்செல்வம் (புளியங்கூடல்), நாகபூஷனி (புளியங்கூடல்), சாந்தி சறோஜினி (தொலைத் தொடர்பு திணைக்களம், யாழ்ப்பாணம்), தேவராசா (வர்த்தகர் - மாவத்தகம) மற்றும் விஜயரட்ணம் (இலங்கை), மருதையினார் (மார்க்கண்டு - கனடா), ஆனந்தி (ஆசிரியர்-யா/நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனியும், மைதிலி (அதிபர்-கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்), வாகீசன் (அமெரிக்க தூதுவராலயம்), கார்த்திகா (ஆசிரியர் - வவுனியா), சாரங்கன் (அவுஸ்ரேலியா), மயூரி (கனடா), வையூரி (கனடா), தினேஸ் (கனடா) ஆகியோரின் பெரியம்மாவும், சர்மிளா (லண்டன்), அனுஷா (லண்டன்), றோஷான் (கனடா), பிரசாந் (கனடா), மதுமதி (பேராதனை பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு அத்தையும், ஸ்ரீஸ்கந்தராசா (அதிபர், யாழ்ப்பாணம் இளையதம்பி வித்தியாலயம்), சிவசக்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-கொழும்பு), பிரதிக் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 737 Dundas Street East, Mississauga, on Lay 235 கனடாவில் 20.07.2025ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு நடைபெற்று பிற்பகல் 02.00 மணிக்கு தகனம் செய்யப்படும்.

**தகவல்:**
**சகோதரன்**
**காராளசிங்கம் - கணேசலிங்கம்**
**ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர் - வேலணை**
**077 844 9687**

**27 1/3 நாவலர்லேன்**
**ஆனைப்பந்தி,**
**யாழ்ப்பாணம்**

# மரண அறிவித்தல்



## பரமேஸ்வரி கந்தையா (சாந்தி)

யாழ் புங்குடுதீவு 9ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி கொழும்பு , கனடா (Etobicoke) ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பரமேஸ்வரி கந்தையா (சாந்தி) அவர்கள் கடந்த (16.07.2025) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் - நவநீதம் தம்பதியரின் மகளும், சுஜித் கந்தையாவின் அன்பு தாயாரும், விக்னேஸ்வரி (வசந்தி) இலங்கை , காலஞ்சென்ற ஜெயரட்ணம் (செல்வம்) லண்டன் மற்றும் சிவயோகரட்ணம் (சிவம்) இலங்கை, சுரேஷ் (ஜேர்மன்), நகுலேஸ்வரி (சுகந்தி - இலங்கை), மங்களேஸ்வரி (விஜி) சுவிஸ்ர்லாந்து ஆகியோரின் அன்பு சகோதரியும், இராஜமோகன், புகழினி, புனிதமோகன், தயாதரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மைதிலி, கௌதமி, நிரோஜன், சுபாஷ்கரன், டினோசிகா, அஜிந்தன், தர்விஸ், தர்விகா ஆகியோரின் அன்பு பெரியம்மாவும், சிந்துஜன், நிருஜா, ஆதிஸ், சுஜா ஆகியோரின் அன்பு அத்தையும், கோகுலன், லிங்கேஸ்வரன், சுகிர்தா, சுஜன் ஆகியோரின் அன்பு மாமியும், அபர்ணா, அஸ்விதா, ஆதிஸ் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்றவர்களாகிய நல்லையர், அன்னம்மா, முத்தாச்சி, பூமணி ஆகியோரின் அன்பு மகள் மற்றும் மருமகள், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, நல்லம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி இளையபிள்ளை ஆகியோரின் அன்பு பேத்தியும், காலஞ்சென்ற நந்தகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற இலச்சுமணன் (பிரான்ஸ்), மற்றும் யோகலட்சுமி (தேவி - கனடா), யோகேஸ்வரி (கனடா), செல்வராணி (ரதி - அமெரிக்கா), ஜானமலர் (கலா - கனடா), சிவகுமார் (சிவா - டென்மார்க்), தவகுமார் (தவம் - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மகள் மற்றும் மருமகளும் ஆவார்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**பொன்நகர் வடக்கு,**
**கிளிநொச்சி.**

**தகவல்:**
**சுகந்தி - 077 577 4844**

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**18 . 06 . 1945**



**மறைவு**
**17 . 07 . 2025**

## இராசதுரை பத்மநாதன்

லோட்டஸ் வீதி, ஆறுகால் மடத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை பத்மநாதன் அவர்கள் கடந்த (17.07.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்தம்பி-மகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற உஷாதேவி அவர்களின் அன்புக் கணவரும், பத்மஉஷா (கனடா), பத்மநிறோஜா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சஞ்சீவன், சூரியகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சோபிகா, வர்னிகா, ல்க்ஷிகா, கோபினா, பவிஷனா, நிவினாஷ், ஸஷ்வின், வாஹினன் ஆகியோரின் அன்புப் பேரனும், மங்கையக்கரசி, சந்தானலட்சுமி, காலஞ்சென்ற பரமேஸ்வரி, யோகநாதன, கலாரதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**766, மானிப்பாய் வீதி,**
**ஆறுகால்மடம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## சஜித்தின் வீடமைப்புத்திட்ட முறைகேடுகள் விசாரணை

சஜித் பிரேமதாஸ அமைச்சராகப் பதவி வகித்த 2015 - 2019 காலத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் முன்னெடுக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களில் இடம்பெற்றது எனக்கூறப்படும் முறைகேடுகள் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதாக நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்தார். குறித்த வீடமைப்புத் திட்டங்களில் நடந்த முறைகேடுகள் குறித்து அமைச்சு மட்டத்திலான விசாரணைகளை முன்னெடுக்க கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக அமைச்சரவைப் பேச்சாளர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

(ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்
இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற
### அம்மன் அருள் வாக்கு
- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- மனதில் நிம்மதி இல்லையா?
- வாழ்வில் நிம்மதி இல்லையா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/16, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)
தொடர்புகளுக்கு :- 077 281 1234

## காணி விற்பனைக்கு
மானிப்பாயில் 24 பரப்பு காணி, விற்பனைக்கு உண்டு. வளமான மண், பசுமையான சூழல், பருவ காலத்தில் பலன் தரும் தென்னை, பனை மரங்கள் மற்றும் மாமரங்கள். வருடம் முழுவதும் சுத்தமான நீர் கிடைக்கும் ஒரு பெரிய கிணறு என்பன அமைந்துள்ளது.
இயற்கை விவசாயம் உயிரியல் பண்ணை வீடு கட்டுவதற்கு ஏற்ற இடம்

தொடர்புகளுக்கு:-
**+9477 481 7601**
(தரகர்கள் தேவையில்லை)


## மணமகள் தேவை
யாழ் இந்து அனுச நட்சத்திரம் 35 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை
தொடர்பு: 074 071 6839
075 096 7443

## வீடு விற்பனைக்கு
கொழும்பு 13 ஜெம்பெட்டா தெருவில் 2 அறைகள், ஹால், கிச்சனுடன் கூடிய 600 sqft சகல வசதிகளுடன் வீடு 2 வது மாடியில் Residential / Commercial Purpose க்கு உகந்தது. உடனடி விற்பனைக்கு உண்டு. விலை 68 லட்சம் ரூபா
தொடர்பு:- 071 605 0074

## உடனடி விற்பனைக்கு
அலுவலக பாவனையில் இருந்த Printer, Laptop, Photocopies, A/C, மற்றும் Scanner உடனடி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 077 666 5628


## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 • 06 • 1949



உதிர்வு 31 • 07 • 2024

### ஸ்ரீமான் மயில்வாகனம் அருள்சோதிநாதன்
(ஓய்வுபெற்ற நிதி முகாமையாளர் வ.பி.போ.சபை)

திதி: ஆடி மாதத் தேய்பிறை ஏகாதசி

பேசும் வார்த்தைகள் எல்லாம் உங்கள் உபதேசங்கள்
நடக்கும் பாதச் சுவடுகள் எல்லாம் உங்கள் பாதச்சுவடுகள்
என்றும் உங்கள் அன்பினால் வழிநடத்திய எம்மை
தவிக்க விட்டுச்சென்றது ஏனோ?

இறையடி அமைதியுற்ற எம் குடும்பத் தலைவரின்
பாதங்களை அர்ச்சிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

"தம்பலை வளவு"
பன்னாலை
தெல்லிப்பளை

குடும்பத்தினர்.


## ஜோதிடம்
வியாழன், சனி, ராகு/கேது மாற்றங்கள்
18/11/2026 வரை
"சீரடி பாபா வரலாறு" ரூ 130/=
எங்கும் விற்பனையாகிறது.
PROF T.சத்தியதாஸன்
ஜோதிட விஞ்ஞான பேராசிரியர். கீரிமலை
தொடர்புகளுக்கு: 077 500 9485
(CS 56890) E

## வேலை வாய்ப்பு
**எங்கள் மோட்டார் பைக் சர்வீஸ் நிலையத்தில் பணியாளர்கள் தேவை!**

Welcome MOTORS தற்போது பின்வரும் பணிகளுக்கு ஆட்கள் தேவை:

- மோட்டார் பைக் மெக்கானிக்
- மோட்டார் பைக் சர்விசர்
- கனினி இயக்குனர்
- அனுபவம் உள்ளவர்கள்/ புதியவர்கள் இருவரும் விண்ணப்பிக்கலாம்
- நல்ல சம்பளம் + நல்ல வேலை சூழ்நிலை
- பணியாளர்களுக்காக வசதியான லிவிங் ரூம்கள் (வசிப்பிடம்) கொடுக்கப்படும்

இடம்: சுன்னாகம், புத்தூர் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு எண்:
**077 631 3655, 021 224 2322**
விரைவில் தொடர்பு கொள்ளவும்


## 32ஆம் ஆண்டு நினைவலைகள் | 28ஆம் ஆண்டு நினைவலைகள் | 11ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 13.02.1929
உதிர்வு 20.12.1993



மலர்வு 19 • 11 • 1961



உதிர்வு 30 • 07 • 1997



மலர்வு 15.01.1930
உதிர்வு 09.03.2014

**இளையதம்பி கந்தசாமி**
திதி: ஸப்தமி

**மைதிலி கந்தசாமி**
திதி: ஏகாதசி

**கந்தசாமி மங்கயர்க்கரசி**
திதி: நவமி

மௌனமாய் பேசும் நிஜங்களாய், நீங்கள் இல்லை என்பதை,
ஒவ்வொரு நினைவிலும் உணர்ந்தாலும்
உங்கள் வார்த்தைகள் ஓசையாக, உங்கள் பாதங்கள் சுவடாக,
ஒவ்வொரு துடிப்பிலும் - ஒவ்வொரு சுவாசத்திலும்
நம் வாழ்வில் ஏற்கனவே ...

ஞானபண்டித பாடசாலை அருகில்
கொக்குவில் மேற்கு

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS/3640) J-1


## இணைப்ப் இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை
தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்
Ts&Cs apply
Www.inaipa.com
(CS/56378) J-1

## காணி விற்பனைக்கு
தனங்கிளப்பில் பூநகரி பிரதான வீதியில் இருந்து 100m தூரத்தில் சுண்டுக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் 4 பரப்பு, 4 3/4 பரப்பு காணி சிறிய வீடு, மின் இணைப்பு மற்றும் நான்கு பக்கமும் முட் கம்பி வேலி, தென்னைகள் உள்ளடங்கியது.
மூன்று பக்க பாதைகள் உள்ளது.
ஒரு பரப்பின் விலை 6 லட்சம்
தொடர்பு: 077 220 3386


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
24 . 05 . 1956



மறைவு
20 . 06 . 2025

கடந்த 20.06.2025 வெள்ளிக்கிழமை அன்று லண்டனில்
சிவபதமடைந்த

## அசோகமலர் அருந்தவநாதன் (மாலா)

உறக்கம் இல்லை என்றாய்,
இப்போது என் கனவில் தான் உறங்குகிறாய்...
காலம் நகர்ந்தாலும்,உன் நினைவுகள் காலையில்லை
உடல் இல்லையெனவே நீ தொலைந்துவிட்டாய்,
உன் அன்பு என் மனதில் இன்றும் முழங்குகிறது.
நீ சென்ற பாதை,இன்று எனது மனப் பாதை!
உறவுகள் பல இருந்தாலும்,
உன்னில் இருந்த அன்பு ஏதுமில்லை.
சிரித்த முகம்,இப்பொழுது சோகத்தை தான் சொல்லுகிறது.
நீ சென்றதும் என் வாழ்வில் ஒரு பகுதி முடிந்தது.
உன் புகைப்படத்தில் புன்னகை,
நீ எனக்கு அழகு சொன்ன கடைசி வார்த்தை.
உன்னை நினைத்தவுடனே இமைகள் நனைந்துவிடுகின்றன.
உன்னை பேசிக்கொள்ள
உலகமே மௌனமாக இருக்கிறது.
நீ மறைந்த நாளிலிருந்து
நான் வாழும் ஒவ்வொரு நாளும் நினைவாகவே இருக்கிறது.

தகவல்
நாதன் (கணவர்), பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பெண் வேலையாள் தேவை

நல்லூர் பகுதியில் வேலை செய்வதற்கு பெண் வேலையாள் தேவை

(நல்லூர் பகுதிக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.)

தொடர்புகளுக்கு: 077 100 7104

## வேலையாள் தேவை

ஒருவர் மட்டும் இருக்கும் யாழ்ப்பாண வீடொன்றில் தங்கியிருந்து சமையல் மற்றும் வீட்டு வேலைகளை செய்ய ஒருவர் தேவை.

வயது 30 - 50 வரை சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்

(CR 45565) E

தொடர்பு: 077 746 9486

## விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம், ஜூலை 20

தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, யாழ்ப்பாணத் தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் மற்றும் தாய்மார் கழகங்கள் இணைந்து நடத்தும் இளையோர் சுகநலக் கண்காட்சியும் விழிப்புணர்வு நடைபவனியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முதல் ஆயர் நினைவாக இரங்கல் திருப்பலி

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க ஆயரும், யாழ். மறை மாவட்டத்தின் முதல் சுதேச ஆயருமான பேரருட்தந்தை ஜெறோம் எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையின் 53 ஆவது மறைவு தின நினைவாக கடந்த வியாழக்கிழமை வடக்கிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் மறை மாவட்டம் யாழ். மறை மாவட்டத்துடன் இணைந்திருந்தபோது 1950 முதல் 1972 வரையான 22 வருடங்கள் ஆயராகப் பணியாற்றினார். ஏழு ஐரோப்பிய ஆயர்கள் யாழ்.மறை மாவட்டத்தை நிர்வகித்தபின் எட்டாவது ஆயராக பாப்பரசரால் இவர் நியமிக்கப்பட்டார்.

இவர் 1972 ஜூலை மாதத்தில் திடீர் சுகயீனத்தால் கொழும்பில் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)


**University of Professional Studies**
**R.A.De Mel Mawatha, Colombo 03.**

**Department of Law**

**சட்டமாணி கற்கைகளுக்கான மாணவர் அனுமதி - 2025**
**Admission of Students for the Academic year 2025**

இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையினால் சட்டத்துறை சார்ந்த பின்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்கை நெறிகள் : (பிரிவு : 4)

**Course 1 : Diploma Courses**
**Course 2 : Degree of Bachelor of Laws (LL.B)**

இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகத்தினால் Diploma in Law, LL.B. Programme கற்கைகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆறு மாத காலங்களினை கொண்டதாக Course 1 கற்கை நெறியும் மூன்று வருட காலங்களினை கொண்டதாக (விசேடம் : 4 வருடங்கள்) Course 2 கற்கை நெறியும் காணப்படுகின்றது.

நன்மைகள் :

- க.பொ.த (சா/த) பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள் கற்கைநெறியில் இணைந்து கொள்ள முடியும்.
- க.பொ.த (உ/த) பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள். உத்தியோகத்தர்கள் LL.B. கற்கைகளில் இணைந்து கொள்ள முடியும்.
- சட்டக் கல்லூரி பரீட்சைகள். சட்டக் கல்லூரியின் Attorney-at-law பதிவு. கற்கைகளினை பூரணப்படுத்த முடியும். ஆங்கில மொழி ஊடாக கற்றல். பரீட்சைகள்.
- விரிவுரைகள் சட்டத்தரணிகளினால் நேரடி. Zoom ஊடாக மேற்கொள்ளப்படு கின்றது. தமிழ் மற்றும் ஆங்கில விரிவுரைகள்.
- இலகு தவணை கட்டண வசதி.
- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரமுடையது.

விண்ணப்பிக்கும் முறை :

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை Whats app/ மின்னஞ்சல் ஊடாக 31.07.2025 இற்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும். மேலதிக விபரங்களினை இணையத்தளம் ஊடாக பார்வையிடலாம்.

ஏற்கனவே 26.06.2025 ற்கு முன் விண்ணப்பித்தவர்கள் மீள விண்ணப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை.

மாதிரி விண்ணப்பப் படிவம் :

**Department of Law**
**Admission of Students for the Academic Year 2025**

1. Full Name :..............................
2. Address : ..............................
3. Date of Birth :..............................
4. NIC No :..............................
5. Educational Qualification :..............................
6. Professional Qualification :..............................
7. Mobile No :..............................

Date :............... Signature :...............

தெரிவு முறை :

நுழைவுப் பரீட்சை/நேர்முகப் பரீட்சை/பேரவையின் இறுதி முடிவு.

மேலதிக விபரங்களிற்கு :

உதவிப் பதிவாளர்,
இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகம்,
கொழும்பு 03.

Whats app : 074 112 7636
Mobile : 074 234 9120/077 570 4893
e-mail : upsrecruitment25@gmail.com
Web : www.upscampus.lk
Colombo/ Batticalo/ Trinco/ Kandy/ Vavuniya/ Jaffna/ Kilinochchi/ Mullitivu/ Mannar


வவுனியா வடக்கில்

# 1000 ஏக்கர் அடர்வனப் பகுதியை அழித்து ஆக்கிரமிக்க முயற்சி!

## ரவிகரன் எம்.பி.யின் தலையீட்டால் தடுத்து நிறுத்தம்

**வவுனியா, ஜூலை 20**

**வவுனியா வடக்கு, வெடிவச்சகல்லுக் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட திரிவைத்தகுளத்தை அண்மித்த பகுதியில் ஆயிரம் ஏக்கர் காடுகளை அழித்துப் பெரும்பான்மை இனத்தவர்களால் எடுக்கப்பட்ட ஆக்கிரமிப்பு முயற்சி தடுத்துநிறுத்தப்பட்டுள்ளது.**

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரனின் தலையீட்டை அடுத்தே இந்த ஆக்கிரமிப்பு முயற்சி தடுத்துநிறுத்தப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. நாடாளுமன்ற உறுப்பினரின் அறிவுறுத்தலுக்கு அமைய வனவளத் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபை ஆகியன சட்டவிரோதக் காடழிப்பில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வனவளத் திணைக்க ளத்தினர் மற்றும் மகாவலி அதிகார சபையினரை அண்மையில் நேரில் சென்று சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர், இந்தச் சட்டவிரோத ஆக்கிரமிப்புத் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக வினவியிருந்தார். ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், சட்டவிரோதச் செயற்பாடுகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். திரிவைத்த குளத்தை அண்மித்துள்ள ஆயிரம் ஏக்கர்வரையான அடர்வனப் பகுதிகள் பெரும்பான்மை இனத்தவர்களால் அழிக்கப்பட்டுள்ளமை தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் கடந்த 7ஆம் திகதி அங்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டிருந்தார். அதன் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் தற்போது சட்டவிரோதக் காடழிப்பு முயற்சி தடுத்துநிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ- 246.26)


**வேலையாட்கள் தேவை**

ஊர்காவற்றுறையில் உள்ள பலசரக்குக் கடைக்கு அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை.
ஆரம்ப சம்பளம் நாள் ஒன்றிற்கு 3000/- ரூபாய்.
EPF, ETF உள்ளடக்கம்.
வருட இறுதியில் கொடுப்பனவு (Bonus) மற்றும் மேலதிக கொடுப்பனவுகள் வளங்கப்படும்.
தொடர்பு கொள்ளும் இலக்கம்:
**077 067 4452**

**Vacancies**

**Construction Company Vacancies**

1. **Accountant** (கணக்காளர்)
   குறித்த துறையில் தேர்ச்சி பெற்றவர்கள். ஓய்வு பெற்றவர்களும் விண்ணபிக்கலாம்.
2. **Molding Work**
3. **Meson** (மேசன்)
4. **Labour**
5. **Driver**(சாரதி)
6. **Technical Officer (Building, Water Technology)**
7. **Labour**

மேற் குறிப்பிட்ட அனைத்து வேலைகளுக்கும் ஆண். பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

**AMMAMMA FOOD RESTAURANT**

8. கொத்து ரொட்டி மாஸ்டர் **(Kottu rotty Master)** ஆண்கள் மட்டும்.
   சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
9. சமையலாளர் **(Cook)**
   ஆண். பெண் இருபாலரும் விரும்பத்தக்கது.
   யாழ்ப்பாண முறையில் சமைக்க தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.
10. வெஜிட்டர் **(Waiter)**
    ஆண். பெண் இருபாலரும் விரும்பத்தக்கது.
    சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
11. காசாளர் **(Cashier)**
    ஆண். பெண் இருபாலரும் விரும்பத்தக்கது.
    அடிப்படை கணனி அறிவு இருத்தல் வேண்டும்.
    சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :- 077 798 7653

**பணிப்பெண் தேவை**

மிகவும் அன்பான சிறிய குடும்பம் ஒன்றை தங்கி நின்று பராமரிப்பதற்கு பணிப் பெண் தேவை.
(உறவினர் போன்று பழகுபவர்)
**077 345 0039, 077 348 0039**

**வேலையாட்கள் தேவை**

வீட்டு பணிப்பெண்
(30 வயதிற்கு உட்பட்டவர்கள், சம்பளம் 100,000 வரை வழங்கப்படும்)
நிகழ்வுகளின் போது புகைப்படம் எடுப்பவர்
(Prosonal photographer)
**075 880 7718**

**வேலைக்கு ஆட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பலசரக்கு கடைக்கு பொருட்கள் பொதி செய்யவும் மற்றும் இதர வேலைகளுக்கு அனுபவமுள்ள ஆண் வேலையாட்கள் தேவை. சம்பளம் - 2000 + 300 (மதிய உணவு)
தொடர்புகளுக்கு:
**077 628 0685, 076 915 8072**

**விற்பனைக்கு**

றிகொண்டிசன் செய்து நல்ல நிலையில்
1. யப்பான் சுப்பர்கப் 90 (HONDA)
2. யப்பான் சுப்பர்கப் 50 (HONDA)
தொடர்புகளுக்கு:
**077 656 6508**

**அரைக்கும் ஆலைக்கு வேலையாட்கள் தேவை**

யாழ் நகரில் இயங்கும் அரைக்கும் ஆலைக்கு வேலையாட்கள் தேவை.
அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளிற்கு: **076 155 9905**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனைத்து...

தாவது:-
தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியின்கீழ் ஊழல்வாதிகள் மற்றும் மோசடியாளர்கள் தப்பவே முடியாது. ஊழல்கள் நிறைந்த அரசியற் கலாசாரத்துக்கு முடிவு கட்டவே நாம் ஆட்சிக்கு வந்தோம். அதற்கே மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். அதற்கமைய ஊழல்களில் ஈடுபட்ட மோசடியாளர்கள் தற்போது சட்டத்தின் பிடிக்குள் சிக்கியுள்ளனர்.
நாம் நீதிமன்றங்களின் விவகாரத்தில் தலையிடவில்லை. சட்டம் தனக்குரிய வகையில் கடமையை நிறைவேற்றும். அதேபோல மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாம் நிச்சயம் கட்டம் கட்டமாக நிறைவேற்றுவோம். இது தொடர்பில் அச்சம் கொள்ள வேண்டியதில்லை. ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை ஒரே இரவில் நிறைவேற்றிவிட வேண்டும் என சிலர் நினைக்கின்றனர். அது தவறு.
அதேவேளை, வறுமையின் கோரப்பிடிக்குள் இருந்து மக்களை மீட்பதற்காக 'சமூகசக்தி' வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அரசியல், பொருளாதார மற்றும் சமூக மேம்பாடே எமது இலக்கு. அதற்குரிய வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன' - என்றார். (அ-ம-26)

## இலங்கைத்...

யில் அவர்கள் அனைவரும் உயிர் தப்பியுள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.
இந்த விடயம் தொடர்பில் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்ததாவது:-
இஸ்ரேலில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் இலங்கையர்களை ஏற்றிக்கொண்டு, கிலியேட் மலாக்கி என்ற பகுதியூடாகப் பயணித்துக் கொண்டிருந்த பேருந்து திடீரெனத் தீவிபத்துக்கு உள்ளாகியுள்ளது. இந்த பஸ்ஸில் 20 இலங்கையர்கள் பயணித்துள்ள நிலையில் அவர்களின் உயிருக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை. தீபரவும்போது, அவர்கள் கண்ணாடிகளை உடைத்துக் கொண்டு தப்பித்ததால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டுள்ளது. ஒருவர் மட்டும் காயமடைந்துள்ளார். எனினும், உயிராபத்தான காயங்கள் ஏற்படவில்லை - என்றார். (அ-ம-இ)

## நாகர்கோவில்...

யில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இந்தக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கஞ்சாக் கடத்தலில் ஈடுபட்டார் என்று சந்தேகிக்கப்படும் நபர் தப்பிச்சென்றுள்ளார். மீட்கப்பட்ட கேரளக் கஞ்சா மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-66-113)

## அப்பக்கடை...

கொடுத்தார்கள். ஆனால், வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்கிறார்கள். விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். கிறிஸ்தவ மக்களுக்கு எதிர்பார்ப்பைக் கொடுத்தார்கள். 'அடுத்த உயிர்த்தஞாயிறுத் தினத்துக்குள் தாக்குதல்தாரிகளைப் பிடித்துக் காட்டுவோம்' என்றார்கள். எதுவும் நடக்கவில்லை.
இன்று வெளிநாட்டு முதலீடுகள் எவையும் இல்லை. குறிப்பிட்ட அமைச்சுகளில் பொறுப்பை ஏற்பதற்கு அதிகாரிகள் இன்மையே முதலீட்டாளர்கள் வராமைக்கு காரணம். முதலீடுகள் இல்லாமல், டொலரை நாட்டுக்குள் கொண்டுவராமல் மக்களிடம் வரியை மட்டும் அறவிட்டு எப்படி நாட்டை முன்னேற்றுவது?
வெளிநாடுகளில் இருந்துதான் முட்டை, அரிசி, தேங்காய், உப்பு எல்லாம் இறக்குமதி செய்யப்படுகின்றன. சுற்றுலாவிகளின் வருகை காரணமாக கிடைக்கும் டொலர் இந்தப் பொருள்களை இறக்குமதி செய்வதற்காக மீண்டும் வெளிநாடுகளுக்கே செல்கின்றது. அப்பக்கடை நடத்தக்கூட தகுதியற்றவர்களால் நாடு சீரழிகின்றது - என்றார். (அ-ம-75)

## செம்மணிப்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வடமாகாணம் யுத்தம் நடந்த மண். வடக்கில் மனிதப் புதைகுழிகள் இருக்கத்தான் செய்யும். யுத்தத்தில் உயிரிழந்தவர்கள் பலர் மண்ணுக்குள்தான் புதைக்கப்பட்டார்கள். எனவே, அந்தப் புதைகுழிகள் யுத்தத்தின் பின்னர் வெளிக்கிளம்பும் போது பலரும் வெவ்வேறு விதமாகக் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.
செம்மணி புதைகுழியைத் தோண்டுவது இன வன்முறைக்கே வழிவகுக்கும். செம்மணியில் தற்போது அவதானிக்கப்பட்ட மனிதப்புதைகுழியை பெருமளவு நிதியை வீண்விரயம் செய்து அரசு அகழ்கின்றது. இது தேவையற்றது.
அந்தப் புதைகுழிக்குள் இருந்து எலும்புக்கூடுகளாக மீட்கப்படுபவர்கள் உண்மையில் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியாது. ஏனெனில் யுத்தத்தில் மூன்று இனத்தவர்களும் உயிரிழந்தனர். எனவே, செம்மணி மனிதப்புதைகுழியை அகழ்வது மீண்டும் இன வன்முறைக்கே வழிவகுக்கும் - என்றார். (அ-ம-26)

## சிறுவயதுக்...

18 வயதுக்குட்பட்ட மாணவிகளின் கர்ப்பங்கள், அவர்களைப் பாதிக்கப்பட்டவர்களாக மாற்றுவதுடன், பல்வேறு சிக்கல்களை உருவாக்குகின்றன. இதனால், பெற்றோரின் கவனிப்பு இல்லாமல், எதிர்காலத்தில் சமூகத்தில் கைவிடப்பட்ட அல்லது அனாதையாக்கப்பட்ட குழந்தைகளின் பிறப்பு ஏற்படுகிறது. இதைத் தடுக்க அரசாங்கமாக நாங்கள் செயற்பட்டு வருகிறோம். கல்வி அமைச்சுடன் இணைந்து, பாடசாலை மாணவர்களுக்குப் பாலியல் கல்வி மற்றும் விழிப்புணர்வு குறித்த தெளிவான புரிதலை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.
ஒரு குழந்தையைப் பெற்றெடுத்த பிறகு, அதற்கான முழுப் பொறுப்பு ஒரு பெண்ணின் மீது மட்டும் விழுவதில்லை. அனாதையாகவோ அல்லது கைவிடப்பட்டவர்களாகவோ சமூகத்தில் விடப்படும் குழந்தைகள், சமூக களங்கத்தையும், பாவத்தையும், சாபத்தையும் சுமக்க நேரிடுகிறது. கரு உருவான பிறகு அதை அழிப்பது குற்றவியல் கொலையாகும் - என்றுள்ளார். (அ-ம-26)

## வடக்குக்...

நாட்டின் கடற்பரப்புகள் அபாயம் மிகுந்தவையாகக் காணப்படுகின்றன.
கொழும்பு தொடக்கம் காலி ஊடாக மாத்தறை வரையான கடற் பிராந்தியங்களில் பல இடங்களில் மழை பெய்யக்கூடும். கடற் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 35 முதல் 45 கிலோமீற்றர் வேகத்தில் மேற்குத் திசையில் இருந்து தென் மேற்குத்திசையை நோக்கி காற்று வீசும். புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி, ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 60 முதல் 70 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் காற்று வீசக்கூடும். மன்னார், காங்கேசன்துறை, திருகோணமலை ஊடாக வாகரை வரையான கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50 முதல் 55 கிலோமீற்றிலும் கூடிய வேகத்தில் காற்றுவீசும். எனவே, பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம் - என்றார். (அ-ம-இ)

## இழப்பீடுகள்...

ரவிகரன் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபையை கடுமையாக விமர்சித்துள்ளார்.
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போது, கடந்த காலத்தில் ஏற்பட்ட நெல் அழிவுகளுக்கான கொடுப்பனவுகள் கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச்சபையால் இதுவரை வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகளால் சுட்டிக் காட்டப்பட்டது.
இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு எச்சரித்திருந்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நான் தொடர்ந்து வன்னிப் பகுதியிலுள்ள அனைத்து அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும் கலந்துகொள்கின்றேன். அந்தவகையில் மன்னாரில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையால் நெல் அழிவுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளுக்கு மட்டுமே நெல் அழிவுக்கான இழப்பீடுகள் வழங்கப்படவில்லை. விவசாயி களுக்குத் தொடர்ச்சியாக பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றிக் கொண்டிருக்கின்றீர்கள். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒருவாரத்துக்குள் நெல் அழிவுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கத்தவறினால் விவசாயிகளுடன் இணைந்து போராட்டத்தில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படும். விவசாயி களுக்கு இழப்பீடுகளை வழங்கமுடியவில்லையென்றால், கமநல காப்புறுதிச்சபையினர் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ந்தும் இருப்பதில் அர்த்தமில்லை. எனவே, உடனடியாக வெளியேறவேண்டும் - என்றார். (அ-ம-26-246)

காணி விற்பனைக்கு
வசாவிளான்
கிழக்கில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
வசாவிளானில் 28 1/2, 27 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தோட்டம் செய்ய பண்ணை அமைக்க சிறந்த காணி.
தொடர்புகளுக்கு:
077 262 7581
077 387 0140

தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு
பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு.10 ஏக்கராகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.
தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526
(CS/58593) J-1

வீட்டு வேலைக்கு ஆள் தேவை
திருநெல்வேலியில் உள்ள 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு ஆள் தேவை.
வேலை நேரம்-08.00 am to 01.00 pm
வயதெல்லை-25-50 (பெண்)
சம்பளம்-100
தொடர்பு: 077 789 8862

வேலையாட்கள் தேவை
சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் ஆண்/பெண் வேலையாள் தேவை. (சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 076 632 3554

சுத்திகரிப்பு பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு
சுத்திகரிப்புப் பணியாளர் தேவை.
(ஆண்/பெண்)
பின்வரும் முகவரிக்கு
21.07.2025, 22.07.2025
ஆகிய தினங்களில்
மு.ப 9.00 - பி.ப 02.00 வரை
நேரில் சமுகம் தரவும்.
உதயன்
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை ஆட்கள் தேவை

மானிப்பாயில் இயங்கி வரும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு வேலை ஆட்கள் தேவைபடுகின்றனர்.

- விற்பனையாளர் (sales men)
- கணக்காளர் (Accountant)
- கனரக வாகன ஓட்டுநர் (Heavy Vehile Driver)

தொடர்பு:- 076 641 3727

(CS/58879) J-1

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீட்டர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீட்டர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

Whats app:-

+61 421 290 240

(CS/56843) J-1

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

077 864 9878

## காணி வாடகைக்குத் தேவை

பலாலி வீதி, கோண்டாவில் வீதி, K.K.S வீதி, இருபாலை சந்தி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வாகன கராஜ் நடாத்துவதற்கு ஏற்ற வெற்றுக் அல்லது கட்டடத்துடன் கூடிய காணி வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- 076 494 9977

(CS/54887?) J-1

## வாடகைக்கு

சுன்னாகம் 188, K.K.S வீதிக்கு அருகாமையில் அமைந்திருக்கும் கல்வி நிறுவனம் ஒன்றில் பெரிய/சிறு குழு வகுப்புக்கள் நடத்துவதற்கு வகுப்பறைகள் உள்ளன. (ஒரு 50 இருக்கைகள், மூன்று 15 இருக்கைகள்) விபரங்களுக்கும், பதிவுகளுக்கும்

தொடர்புகளுக்கு:

070 686 7695, 076 897 665, 077 386 7695

## வணிகக் கட்டிடம் வாடகைக்கு தேவை

பிரபல முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு மோட்டார் வாகனம் மற்றும் உதிரிப்பாக விற்பனைக்கு உகந்த, 2000 சதுர அடியில் வவுனியா,யாழ்பாணசாலையில், வவுனியா நகருக்கு அருகாமையில், அடிப்படை வசதிகளுடனான வணிகக் கட்டிடம் வாடகைக்கு தேவை.

தொடர்பு: 071 489 6496

## விற்பனைக்கு

தும்பு தொழிலுக்கு தேவையான சகல உரப்பைகளும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

077 248 7852

## காணி விற்பனைக்கு

55 New செம்மணி வீதி, கல்வியங்காட்டில் 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு. Point Pedro வீதியில் இருந்து 350m நல்லூர் கோவில் - 1.7 km

தொடர்பு: 077 185 4870

## காணி விற்பனைக்கு

ஆடியபாதம் வீதியில் இருந்து 100m தொலைவில் 5 1/4 பரப்பு மற்றும் 2 1/2 பரப்பு காணி துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

077 257 5712, 077 166 3859

## பண உதவி தேவை

48 வயதுடைய சிறுநீரகம் செயலிழந்த ஒருவருக்கு சிறுநீரகத்தை மாற்றுவதற்கு பண உதவி தேவையாக உள்ளது. அன்பளிப்பு செய்ய உதவும் அன்பர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 777 0394

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 08 . 08 . 1973

மறைவு 17 . 07 . 2025

**அமரர் ஜோண்பின்ரா மேரி மரீஸ்மிலா (மக்சி)**

(கரித்தாஸ் வன்னி கியூடெக் நிறுவன இயக்குனரின் அன்புச் சகோதரி)


எமது நிறுவன இயக்குனர் அருட் தந்தை செ.செபஜீவன் அடிகளாரின் அன்பு சகோதரி மேரி மரீஸ்மிலா அவர்களின் இறப்பு செய்தியை கேட்டு மனம் வருந்துகிறோம், மேலும் இவரின் பிரிவால் துயரிற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா இறைவனுள் இளைப்பாறப் பிரார்த்திக்கின்றோம்.

பணியாளர்கள்
கரித்தாஸ் வன்னி கியூடெக்,
கிளிநொச்சி

இல 47,
1ம் குறுக்கு தெரு,
யாழ்ப்பாணம்

(CS 30402) E

## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 28 . 10 . 1949

மறைவு 20 . 06 . 2025

கடந்த (20.06.2025) வெள்ளிக்கிழமை அன்று எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு இணுவைக்கந்தன் பாதங்களைச் சரணாகதி அடைந்த எமது குடும்பத் தலைவர்

**இராசா. பாலச்சந்திரன்**

(ஓய்வு பெற்ற விஞ்ஞான பாட ஆசிரியர் - யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, இணுவில் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபை முன்னாள் தலைவரும், இணுவில் அறிவாலய முன்னாள் தலைவரும், இணுவைக் கந்தன் அறக்கட்டளையின் முன்னாள் தலைவரும், இணுவில் எவரெஸ்ட் கல்வி நிறுவன முன்னாள் நிர்வாகியும்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (20.07.2025) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்

குடும்பத்தினர்
021 224 13 65

(CS/56901) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 20.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

பதுமழை மொக்குளின் பல்காலும் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித் – தடுமாற்றம்
தீர்ப்பேம்யாம் என்றுணரும் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்.

– நாலடியார்

A

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஆடி 04 ஞாயிற்றுக்கிழமை (20.07.2025) சிகரம் :148



# யாழ்ப்பாணமே! நீ குடிப்பது நல்ல தண்ணியா ?

O நிலாந்தன்

அ ஒரு காலம் சேவல் கூவி எமது இரவுகள் விடிந்தன. பிறகு ஒரு காலம் எறிகணைகள் வெடித்துப் பகல் விடிந்தது. ஆயுத மோதல்களுக்குப்பின் பேக்கரி வாகனங்களின் இசையோடு பகல் விடிகிறது. ஆனால் அண்மை ஆண்டுகளாக பேக்கரி வாகனங்களோடு சேர்த்து மற்றொரு வாகனமும் ஊர் ஊராக வருகிறது. அதுதான் தண்ணீர் விற்கும் வாகனம். அதுவும் இசையோடுதான் வருகிறது.

அதாவது நீரை விலைக்கு வாங்கும் ஒரு சமூகமாக நாங்கள் எப்பொழுதோ மாறி விட்டோம். சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சமயப் பெரியார் இது தொடர்பாக பகிரங்கமாகப் பேசியிருந்தார். "ஆலயங்களில் காணப்படும் பொதுக் கிணறுகளில் உள்ள நீரை தீர்த்தம் என்று கூறி ஊர்முழுதும் அருந்தியது. ஆனால் இப்பொழுது பெரும்பாலானவர்கள் வடிக்கப்பட்ட நீரைக் குடிக்கிறார்கள்" என்ற பொருள்பட அவர் கவலைப்பட்டிருந்தார். அது மட்டுமல்ல. "கிணற்று நீரைக் குடிக்கலாமா இல்லையா என்பதனை இதுதொடர்பாக துறைசார் நிபுணர்கள் தெளிவுபடுத்த வேண்டும்" என்றும் அவர் பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்திருந்தார். ஆனால் அந்த வேண்டுகோளுக்கு எனக்குத் தெரிந்தவரை இன்றுவரையிலும் யாரும் உத்தியோகபூர்வமாக பதில் சொல்லவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன் சுன்னாகத்தில் நடந்த ஒரு சந்திப்பின்போது இதுதொடர்பான ஆராய்ச்சிகளில் ஈடுபடும் பேராசிரியர் சிறீஸ்கந்தராஜாவிடம் இந்தக் கேள்வியை நான் கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டே சொன்னார்... ஒஸ்ரேலியாவில் தான் மேற்படிப்புப் படிக்கும் பொழுது இந்தக் கேள்வியை ஒருவர் தமது விரிவுரையாளரிடம் கேட்டாராம். அதற்கு அந்த விரிவுரையாளர் சிரித்துக்கொண்டே சொன்னாராம்."யாழ்ப்பாணத்தவர்கள் கெட்டிக்காரர்கள் என்று கூறுகிறோம். அந்தக் கெட்டித்தனத்துக்கும் அவர்களுடைய கிணத்து நீருக்கும் தொடர்பு இருக்குமா ?" என்று.

ஆனால் நடப்பு நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்தால் அதாவது ஈழத் தமிழர்களின் சமூகப் பொருளாதார அரசியல் நடப்புகளைத் தொகுத்துப் பார்த்தால் ஈழத்தமிழர்கள் தங்களைக் கெட்டிக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்க முடியுமா என்ற கேள்வி பாரதூரமாக மேல் எழுகிறது.

சில மாதங்களுக்கு முன்பு யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பகுதியை சேர்ந்த ஒரு நாடகச் செயற்பாட்டாளரை ஒரு நீர் விற்கும் கடையில் கண்டேன். அவரிடம் கேட்டேன் "உங்களுடைய கிணற்று நீரை அருந்த முடியாதா?" என்று. அவர் சொன்னார் "எனது பகுதிகளில் நீர் பெருமளவுக்கு உவராகிக் கொண்டுவருகிறது" என்று. அவர் அப்படிக் கூறுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே யாழ். கடல் நீரேரியை அண்மித்திருக்கும் கோப்பாய், இருபாலை ஆகிய பகுதிகளில் நீர் உவராகி வருவதாக முறைப்பாடுகள் உள்ளன.

ஆனால் இது இன்றைக்கு நேற்றைக்கு வந்த பிரச்சினை அல்ல. ஒரு நூற்றாண்டு காலப் பிரச்சினை. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் 1894 ஆம் ஆண்டு பொது வேலைகள் திணைக்களத்தின்(PWD) ஆணையாளருடைய அறிக்கையில் பின்வருமாறு கூறப்படுகிறது." யாழ்ப்பாணத்துக்கான நீர் வழங்கல் குறுகிய காலத்தில் ஒரு மிக முக்கியமான பிரச்சினையாக உருவெடுக்கக்கூடும். யாழ்ப்பாணத்தில் உள்ள கிணறுகளில் பெரும்பாலானவை படிப்படியாக உவர்த்தன்மை கொண்டவையாக மாறிவருவது உண்மை. எடுத்துக்காட்டாக, பொது வேலைகள் பகுதியின் வளவுக்குள் இருக்கும் கிணறு 15 ஆண்டுகளுக்கு முன்னர் நல்ல தண்ணீரைக் கொண்டிருந்தது. அந்த வளவிலிருந்து நீர்பாய்ச்சி மிகச் சிறப்பான திராட்சைக் கொடிகளை வளர்த்தனர். ஆனால், இப்போது நீர் உவர்த்தன்மை கொண்டதாக மாறிவிட்டது. திராட்சைக் கொடிகளும் அழிந்துவிட்டன.....கச்சேரி வளவுக்குள் உள்ள பெரும்பாலான கிணறுகளுக்கும் இதே நிலைதான். தற்போது முற்றவெளியில் உள்ள இரண்டு கிணறுகளும், சுண்டிக்குழிக் குருமனை வளவில் உள்ள ஒரு கிணறும் மட்டுமே நல்ல தண்ணீர்க் கிணறுகள். முற்றவெளிக் கிணறுகளிலிருந்து தொடர்ச்சியாக நீரை அள்ளுவதால், அவை நீண்டகாலம் தாக்குப் பிடிக்கும் என்பது ஐயத்துக்குரியது. இந்த நல்ல தண்ணீர்த் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஏதாவது ஒரு வழியில் தயாராவதற்காகப் புத்தூர்க் கிணற்றுத் திட்டத்தைக் கவனத்தில் எடுத்துள்ளோம்....."

மேற்படி தகவல்களை அண்மையில் வெளியிடப்பட்ட "யாழ்ப்பாண நகரத்தின் வரலாறு" என்ற நூலில் காணலாம். தமிழ் விக்கிபீடியாவை ஸ்தாபித்தவர்களில் ஒருவராகிய, கட்டடப்படக் கலைஞர் மயூரநாதன் அந்த நூலை எழுதியுள்ளார். ஆகவே இது ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே மேலெழுந்த ஒரு பிரச்சினை. அதுவும் குடித்தொகை பெருகாத, தொழில்நுட்பம் இப்போதிருக்கும் வளர்ச்சியை அடைந்திராத, ஒரு காலகட்டத்தில் உணரப்பட்ட ஒன்று. ஆனால் அதிலிருந்து ஒரு நூற்றாண்டுக்கு மேலான பின்னரும் இந்த விடயத்தில் தமிழ் மக்கள் விழிப்பில்லாமல் இருப்பதன் விளைவாகத்தான் குடிக்கும் நீரை விலைக்கு வாங்கும் ஒரு நிலை வளர்ந்து வருகிறதா? இவ்வாறு தெருத்தெருவாக நீர் விற்கும் கடைகள் மற்றும் வாகனங்களில் எத்தனை அதற்குரிய பதிவுகளோடு இயங்குகின்றன? யாழ். மாநகரசபையில் மணிவண்ணன் மேயராக இருந்த காலத்தில் மாநகரசபை உறுப்பினரான பார்த்திபன் இதுதொடர்பான தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்தார். தொடக்கத்தில் ஆறுக்கும் குறையாத நீர் விற்கும் கடைகள் இருந்தன. இந்தக்கடைகள் எவையும் நீரை விற்பதற்கு அனுமதி பெற்றவை அல்ல. வியாபார அனுமதியை மட்டும் பெற்றவை. இதுதொடர்பாக பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் இல்லை என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தக் கடைகளை விட முதலில் ஊர் ஊராக வாகனங்களில் நீர் விற்கப்படுவதைக் கட்டுப்படுத்தும் நோக்கத்தோடு பார்த்திபன் மேற்படி தீர்மானத்தைக் கொண்டு வந்தார். எனினும் அந்தத் தீர்மானத்தை முழுமையாக அமுல்ப்படுத்துவதற்குப் பொலிஸார் போதிய ஒத்துழைப்பைத் தரவில்லை என்று கூறப்படுகிறது. மாநகரசபை ஊழியர்கள் அந்த வாகனங்களைத் தடுத்து நிறுத்தமுடியாதவர்களாகக் காணப்பட்டார்கள். இப்பொழுது கிடைக்கும் தகவல்களின்படி யாழ். நகரப் பகுதிக்குள் 30க்கும் குறையாத நீர் விற்கும் கடைகள் வந்துவிட்டன. தான் ஆணையாளராக இருந்த காலகட்டத்தில் மொத்தம் ஆறு கடைகளே இருந்ததாக முன்னாள் ஆணையாளர் ஜெயசீலன் தெரிவித்தார். இப்பொழுது புதிய மாநகரசபை நிர்வாகம் வந்துவிட்டது. யாழ்ப்பாணத்தின் குடிநீர் உவராகும் ஆபத்தைக் குறித்தும் யாழ்ப்பாணத்தின் நகரப்பகுதியில் உள்ள பெரும்பாலான கிராமங்கள் வடிக்கப்பட்ட நீரை விலைக்கு வாங்குவது தொடர்பாகவும் கவனம் செலுத்தவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் புதிய நிர்வாகத்துக்கு உண்டு.

யாழ். மாநகரசபைக்கு மட்டுமல்ல புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட எல்லா உள்ளூராட்சிசபைகளுக்கும் அந்தப் பொறுப்பு உண்டு. கிட்டத்தட்ட நூற்றாண்டு காலமாக ஒரு பிரச்சினை படிப்படியாக வளர்ந்து வந்து இப்பொழுது காசுக்கு நீர் வாங்கிக் குடிக்கும் ஒரு நிலைமை தோன்றி விட்டது. தமிழ்ச்சமூகம் தன்னை மெத்தப் படித்த சமூகம் என்று நம்புகின்றது. ஆனால் தன் சொந்தக் கிணற்று நீரைக் குடிக்கலாமா இல்லையா என்ற கேள்விக்கு விடை காண முன்னரே பல கிணறுகள் உவராகி வருகின்றன.

அண்மையில் ஐரோப்பிய நாடொன்றில் இருந்து வந்த ஒருவர் சொன்னார் யாழ்ப்பாணத்தில் விற்கப்படும் நீரைக் குடித்த பொழுது அது கனமில்லாமல் இருந்ததாக தான் உணர்ந்ததாக. லண்டனில் தான் குடித்த நீரோடு ஒப்பிடுகையில் இங்குள்ள வடித்த நீர் இலேசானதாக இருப்பதாகவும் அவர் கூறுகிறார். இவ்வாறு உடலுக்குத் தேவையான கனியுப்புக்கள் வடிக்கப்பட்ட நீரைக் குடிப்பதால் வரும் பாதகமான விளைவுகள் எவை ?

"யாழ்ப்பாணத்தின் ஆழக் கிணறுகளில் ஏடுக்கும் நீரில் படியும் கல்சியத்தை அந்நியப் பொருளாக யாழ்ப்பாணத்தவர்கள் பார்க்கத் தேவையில்லை. அது யாழ்ப்பாணத்துக்கு அந்நியமானது அல்ல. சுண்ணக் கற் பிரதேசத்தில் பிறந்தவர்களுக்குக் கல்சியம் ஒரு புறத்திப் பொருள் அல்ல" என்று பேராசிரியர் சிறீஸ்கந்தராஜா கூறுகிறார்.

புதிய உள்ளூராட்சிசபைகள் இந்த விடயத்தின் மீது கவனத்தைக் குவிக்க வேண்டும். முதலில் வடித்து விற்கப்படும் நீரைக் குடிப்பதில் உள்ள நன்மை தீமைகளை ஆராய வேண்டும். இரண்டாவதாக தமிழ் மக்கள் நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டும்; பெருக்க வேண்டும். அதாவது உள்ளூராட்சி சபைகள் அதற்குப் பொருத்தமான பசுமைப் பொருளாதாரத் திட்டங்களை வகுக்க வேண்டும்.

இதுதொடர்பான துறைசார் ஆராய்ச்சிக்காக தாயகத்திலேயே வந்து தங்கி இருக்கின்ற பேராசிரியர் சிறீஸ்கந்தராஜா போன்றவர்களின் துறைசார் ஞானத்தை உள்ளூராட்சிசபைகள் பெற்றுக்கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்களில் பொறியியலாளர்கள் மத்தியில் இது தொடர்பான விழிப்புடையவர்கள் பலர் உள்ளனர். எல்லாரையும் அழைத்து இதுதொடர்பாக கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தி தமிழ் மக்கள் தமது நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் பசுமைத் திட்டங்களை வகுக்க வேண்டும். சில கிழமைகளுக்கு முன்பு பேராசிரியர் சிறீஸ்கந்தராஜா தலைமையிலான ஒரு குழுவினர் வழுக்கி ஆற்றின் தடங்களைப் பின்தொடர்ந்து சென்று யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாப்பது தொடர்பான கள ஆய்வுகளை மேற்கொண்டார்கள். வழுக்கியாறு ஓடியதாகக் கருதப்படும் தடங்களில் காணப்படும் குளங்களையும் நீர்நிலைகளையும், நீர் தேங்குமிடங்களையும், நீரோடும் வழிகளையும் பாதுகாப்பதன்மூலம் நிலத்தடி நீரைப் பாதுகாக்கலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். இதுதொடர்பில் உள்ளூர் மக்களின் அனுபவத்தையும் ஆதரவையும் பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கான தொடர்ச்சியான ஆராய்ச்சிகளில் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். புதிய உள்ளூராட்சிசபைகளில் கட்சி முரண்பாடுகளும் மோதல்களும் நிறைய உள்ளன. ஆனால் அவர்கள் போட்டிபோட வேண்டிய இடம் அதுவல்ல. தங்கள் உள்ளூராட்சிப் பிரதேசங்களை எப்படிப் பசுமைப் பிரதேசங்களாக மாற்றுவது என்பதில்தான் அவர்கள் போட்டி போட வேண்டும். ஒவ்வொரு உள்ளூராட்சிசபை உறுப்பினரும் தனது வட்டாரத்தைத் தூய்மையானதாக, குப்பையற்றதாக, பசுமை வட்டாரமாக மாற்றுவது என்று உறுதிபூண வேண்டும். அவருடைய பதவிக்காலம் முடியும் பொழுது அவர் நட்ட மரங்களும் அகழ்ந்த குளங்களும் தூர் வாரிய வாய்க்கால்களும் என்றென்றும் அவருடைய சந்ததிக்கு அவருடைய புகழைச் சொல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தி

# நந்தினி

போரின் கவிதை 21



எப்போதும் இப்பாதை இருளாகத்தான் இருக்கும்
சூரியன் முகம் காட்ட மறுப்பான்
அச்சம் கொண்ட மக்கள் ஒளிந்துகொள்வதால்
காய்ந்த வயல்கள் சுடுகாடாகத் தகிக்கும்.

ஆட்காட்டிக் குருவிகள் கத்தும்
பகலில் மௌனம் பயமாக இருக்கும்..
பெற்றோர் இல்லாத பிள்ளை நான்..
பள்ளி செல்வதற்கு இந்த வழிதான் .

ஆட்சி வந்ததும் அரண்கள் முளைத்தன..
அடையாளம் கேட்டு நிறுத்தி, மறித்து
சேட்டைக் கதைகள் ..சில்மிசங்கள் ...
வன்முறைக்காக வளர்க்கப்பட்டவர்களாக,
பெண்களின் அங்கங்களை காமக் கழிப்பிடங்களாக
கருதி இரசிப்பவர்கள் ..கசக்க நினைப்பவர்கள்.

அடிமையாகவே இருக்கவேண்டும்
அடங்கியே வாழவேண்டும்..
'போராளி' என்று பிடித்துவிட்டால்
பின்னர் வாழ்வே பாழாகிவிடும்..
மனதும் உடலும் இரும்பாகிவிடும்..
வெறுப்பை உள்ளே மறைத்துக்கொண்டு
புன்னகைத்தபடி காவலரண்களை
தாண்டவேண்டும் ..
அருகில்வரும்போது வேகமாக
மிதிவண்டியை அழுத்தி அழுத்தி மிதித்து
அவசரமாகச் செல்வதாக பாசாங்குசெய்து
அருவருப்பான முகங்களை
நிமிர்ந்து பார்க்காமல் ஓடி விட வேண்டும்.

இரட்டை அர்த்தத்தில்
கொச்சைத் தமிழ் பேசுவோரை
கோவித்து விட முடியாத பிறவிகள் நாங்கள்.
பயம் மட்டுமே வாழ்வில் நிறைய இருந்தது..

வாழ்வை வெல்வதற்குப் பொறுமைதான்
அவசியம்.. படிப்புதான் செல்வம்
பாட்டியின் நச்சரிப்பும் எதிர்பார்ப்பும்
உற்சாகம் கொடுக்கும்...
எப்படியும் முன்னுக்கு வரவேண்டும்
அதற்குப் படிக்கவேண்டும்.

பள்ளிக்கூடம், ரியூசன் இந்த வழி...
குறுக்கு வழி போகாதே என்பாள் பாட்டி
விரைந்து போகலாம் என்னும் எண்ணம்
இந்த வழியைச் சொந்தமாக்கியது.
வேறு வழி போகாமல் தடுத்தாள் பாட்டி.
காமங்களின் ராஜாக்கள் கைவைப்பர் என்றாள்
அர்த்தம் எனக்கு அன்று புரியவில்லை.

இரட்டை ஜடைப் பெண்ணாய் நெற்றிக் குறியோடு
பள்ளிச்சீருடையில் .. மிதிவண்டி
எட்டி மிதிக்கும் காலினைக்
கிள்ளிப் பார்ப்பான் காவல் மனிதன்..
கால் கடுக்க காவல் நிற்கும் அவன்மீது
இரக்கம் பிறக்கும் ...அவனும் மனிதன்தானே!

இவர்கள் அடித்த குண்டில்தான் என் குடும்பம்
பலியானதென பாட்டிச் சொல்லக்கேட்டு,
அவர்களைக் கொல்லவேண்டுமென இதயம்
துடிக்கும்..படிப்பின் ஆர்வம் தடுக்கும்..
கொலை செய்தால் சிறைபோகவேண்டும்
பயமாக இருக்கும் படிப்புத்தான் வாழ்வு.

படித்துவிட வேண்டும் பட்டம் பெறவேண்டும்
நீண்ட நாள் தவம்.. தவறு செய்ய மறுத்தது..
காலம் கடந்தும் வாழவேண்டும்
எதையும் கடந்து செல்ல தயாராகினேன்..

அன்றைய பொழுது பள்ளியின் பின் ரியூசன் முடித்து
அந்திசாயும் பொழுதில் தனிமையில் வந்தேன்..
வயிற்றின் பசியும் தூக்கக் கலக்கமும்
விறுவிறுப்பாக வீடு போகத் துடித்தது..

மாலைப்பொழுதில் வீதியில் நிற்காதே
பாட்டியின் வார்த்தைகள் கதைத்துக் களைத்தன.
வேக வேகமாக மிதிக்கிறேன் வண்டியை
வயிற்று வலி மிகவும் வதைத்தது.

இரண்டு இராணுவம் தம் கைகளை
காட்டி மறித்தது......
நிற்கும்படி வற்புறுத்தினார்கள்....
கதைத்துக்கொண்டே நேரம் கடந்தது .
கேள்விகள் கேட்டார்கள்
பல பதில்கள் சொல்லியும் விடவில்லை
வயிறு வலித்துத் துன்புறுத்தியது..

வழியை விடும்படி வற்புறுத்திக்கேட்டேன்..
மறுத்தவர்கள் என் வாயை அடைத்தனர்.
சூரியன் ஓடி ஒளித்துக்கொண்டது.
யார் வந்து என்னைக் காப்பாற்றுவார்?
இறுகப் பற்றி ஒருவன் எங்கையோ
தூக்கிச் சென்றான் ..
மற்றவன் மிதிவண்டியைத் தூக்கி
எங்கோ மறைத்துவைத்தான்.

வேறு பாதையில் பாட்டி தேடுவாள்.
அலைந்து திரிவாள் அழுவாள்.
நானோ பாதுகாப்பில்லா
வாழ்விடமொன்றில் சிக்கிவிட்டேன்!
ஏன் இவர்கள் இப்படிச் செய்கிறார்கள்?
தீராத சாபத்தை மூட்டையாக வாங்குகிறார்கள்.

பற்றையின் மறைவில்
ஒளித்துக்கொள்கிறார்கள்..
இருள் கவ்வும் மாலையில் இங்கு
யாருமே வருவதில்லை..
சுடலையின் அகால அமைதியும்
சாக்காட்டுப் பிணங்களின் எரிந்த மணமும்
பயங்கரமாக மனதை வெருட்டின.

கிராமத்தின் அழகை இரசிக்க நான் தேடிய
பாதை என் கதை முடிக்கும் பாதையாகப்
போகுமென்று நான் சிந்திக்கவில்லை...
கத்தமுடியாமல் வாய்கள் அடைக்கப்பட்டன.
உடலை அசைக்க இயலவில்லை....
காமுகர் கூட்டம், கயவர்கள் தோட்டம்
பிணந்தின்னிப் பேய்கள் பெண் தின்னும்
ஆண்கள் என் உருவத்தை மெல்ல மெல்ல
சிதைக்கத் தொடங்கினர்....

ஆடைகள் களைந்தனர்...ஆடினர்
ஆணவம் புரிந்தனர்...தள்ளாடினர்
வாய்க்குள் அடங்கிய சீருடைத்துணி
மூச்சை அடக்கி நெஞ்சு வலித்தது...
கொடூரமாக அவர்கள் காமம் தீர்த்தனர்
வயிற்றின் வலி உணர ஏதோ அழுவாக

உள்ளே இறக்கி வருத்தியது ...
செத்துவிடுவேனோ? என் கல்வியும்..
கனவும் ..இறைவா என்னை வாழவிடு.

பெற்றவர் இழந்து சகோதரர் தொலைத்து
தனிப்பெண்ணாக வாழும் ஓர்
ஏழைப்பெண்ணைக் காப்பாற்று!
எங்கோ கோயில் மணி கேட்கிறது.
இறைவன் வருவானோ ?
ஏங்கிக் களைக்கிறேன்.
ஆளில்லாப் பொழுதில் சிக்கிக்கொண்ட
அப்பாவி என்னைக் காப்பாற்ற வா இறைவா!

கைகள் குரல்வளையை நொருக்குகின்றன,
மூக்கின் வழியே காற்றுப்போக மறுக்கிறது
மூளை சிந்திக்கிறது...உடல் சோர்ந்து போனது
குரல்வளை அழுத்தப்படுகிறது...
உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமல்
மூன்று புலன்களும் செயலிழந்தன...
கண்களும் மூடிக்கொள்கின்றன...
காதுகள் மட்டும் கேட்கிறது ....

சீருடை நெருப்பில் எரிகிறது....
வெற்று மேனியை இருவருமாக
இழுத்துப்போடுகிறார்கள்..
இப்போது புலன்களை விடுவித்தாலும்
அவை சுயநினைவுகளை இழந்து நிற்கின்றன...
கைகளால் கும்பிட்டு கால்களைப் பிடித்து
'விட்டுவிடுங்கள்' என்று கேட்கத் தோன்றுகிறது
அவை கட்டப்பட்டிருக்கின்றன...
தாகம் எடுக்கிறது....தண்ணீர் கேட்கிறேன்..
சொட்டு நீர் கூட வாய்க்குள் விடவில்லை..
இத்தனை இரக்கமற்றவர்களா இவர்கள்?
இவர்களுக்கு என்ன தண்டனையை?
இயற்கை தரப்போகிறது ?
இறைவன் இல்லை என்பதற்கு
நானும் ஒரு சாட்சியாகிறேன்.

பாடப் புத்தகத்தில் படித்த நினைவுகள்
கொடுமையின் முடிவில்
இறைவன் வருவான் ...தீயோரை அழித்து
திருவிளையாடல் செய்வான்!
எல்லாம் பொய் மொழிகளா?
இறைவனும் இவர்களும் சாட்சியாகிய
இப்பொழுதை இவ்வுலகிற்கு யார்
சொல்வார்?...என் மரணத்தின் கொடுமையை
பாட்டி எப்படி அறிந்து கொள்வாள்?

பாழடைந்த பதுங்குகுழிக்குள்
உயிரின் மூச்சு இழுக்கும்....
பதின்மவயதின் எதிர்காலத்தை...
உள்ளிழுத்து மண் போடுகிறார்கள்.
காமத்தின் வேட்டை முடிந்தது....
பாவத்தின் கணக்கு ஆரம்பிக்கிறது.

இப்போதும் என் மூளை இயங்குகிறது....
பாட்டியைத் தேடுகிறது... பாவம்!
எங்கெல்லாம் தேடி அலைவாள்?
பைத்தியம் பிடித்துத் தெருவில் கிடந்து
உருள்வாள்..... அந்த ஏழைக் கிழவியிடம்
இதை யார் சொல்வார்?..என்றோ ஒரு நாள்
தாம் விதைத்த பாவத்தை அறுக்கும் காலத்தில்
இயற்கை இந்த இடம் காட்டும்.
ஆடையில்லா எலும்பொன்றை
பூமி வெளித்தள்ளும்...பூமிக்குள்
புதைத்த என் கனவுகளும் கண்ணீரும்
மாற்றான் வாழ்வை மாற்றும்..
குற்றமிழைத்தோரே சாட்சியாக மாறும்
ஒரு பொற்காலம்.....
நிச்சயம் ஒரு நாள் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி

விசும்பின் துளி வீழின் அல்லால்...




# மறந்துபோவோமா வழுக்கியாற்றினை?

"நடந்தாய் வாழி வழுக்கி ஆறு" என்ற பெயர் கொண்டு வழுக்கி ஆற்றின் குளங்களைத் தரிசிக்கும் பயணத்தில் ஆரம்பித்து பல்வேறு களப்பயணங்களை நாம் கடந்த இரு வருடங்களில் மேற்கொண்டிருந்தாலும் கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி நிகழ்ந்த களப்பயணம் எமது முயற்சியில் புதிய படிக்கற்களை எட்டுவதற்கும் நீரும் மனிதரும் என்ற இணைந்த ஒரு தொகுதி என்பதை மேலும் புரிந்துகொள்ளவும் வாய்ப்பளித்தது. எமது ஆலோசகர்களில் ஒருவரும், சமூக நீரியல் துறையின் தந்தை என வர்ணிக்கப்படுபவருமான பேராசிரியர் சிவபாலன், மற்றும் WASPAR அணியின் ஆய்வாளர்கள், ஒவ்வொரு இடத்திலும் பெருமளவில் எம்முடன் உரையாட இணைந்து கொண்ட வழுக்கி ஆற்றுப் பாதை கிராம மக்கள், விவசாயிகள், அரச அலுவலர்கள், பங்காளர்கள் அனைவரும் எமது கற்றலையும் புரிதலையும் மேலும் ஆழப்படுத்தவும் அகலப்படுத்தவும் உதவினர்.

வழுக்கியாற்றின் நீரேந்து பிரதேசத்தின் தோற்றுவாய் என்று கருதப்படும் பகுதியான வறுத்தலைவிளான் - தென்மயிலை - கட்டுவன் பகுதியில் உள்ள வறுத்தலை விளான் பிள்ளையார் கோயில் குளத்தில் ஆரம்பித்து தெல்லிப்பழை வைத்தியசாலையின் வாசலில் செல்லும் வழுக்கி ஆற்று வாய்க்கால், தெல்லிப்பழை பெரிய தம்பிரான் கோயில் (சுழுவில்) குளம், அளவெட்டி பிணாக்கை குளம், கந்தரோடைக்குளம், சீரணி மதகு, அராலி மதகு, முதலியார் குளம் எனப் பல புள்ளிகளில் நிகழ்ந்த பல்பரிமாணக் கலந்துரையாடல்கள் அராலி தடுப்பணை வரை தொடர்ந்ததன் முடிவில் களப்பயணம் நிறைவடைந்தது.

பரந்த வழுக்கியாற்று நீரேந்து பிரதேசம் இலங்கையின் ஆறுகளுடன் ஒப்பிடும்போது சிறிய நிலப்பரப்பாக இருந்தாலும் வழுக்கியாற்றின் வழிதோறும் நாம் தரிசித்த குளங்களும் அவற்றைச் சூழ உள்ள வாழ்வியலும் பற்பல தனித்துவங்களை கொண்டிருப்பதோடு பொதுவான நெருக்கடிகளின் மத்தியில் சிக்கலான தனித்தனி பிரச்சினைகளையும் கொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. ஆனால் அனைத்தையும் தொடுக்கும் ஒரு பூமாலை நாராக வழுக்கி ஆறு தொடர்ந்துகொண்டிருப்பதையும் வழுக்கி ஆற்றின் ஒரு புள்ளியில் நடக்கும் ஏதோ ஒரு மாற்றம் அதன் பாதையின் இருமருங்கிலும் தாக்கம் செலுத்துவதை களத்தில் கிடைத்த கருத்துகள் மூலம் அனுமானிக்கவும் முடிந்தது. ஓரிடத்தில் உள்ள மதகின் தொழிற்பாடுகூட தொலைவில் இருக்கும் இன்னொரு இடத்தைப் பாதிக்கும் சாத்தியத்தை உணரமுடிந்தது. தொடர்ந்துகொண்டேயிருக்கும் நில ஆக்கிரமிப்புகளால் வழுக்கியாறு பல இடங்களில் சுருங்கியும் கவனிப்பாரற்றும் இருந்ததைக் கண்டோம். இருந்தும் நாம் கடந்து வந்த பாதையில் சந்தித்த அத்தனை பேரும் வழுக்கியாற்றையும் அதன் வழிதோறும் உள்ள குளங்களையும் பாதுகாப்பது எமது நிலத்தடி நீர்வளத்தைப் பாதுகாக்க அதி முக்கியமானது என்பதில் எவ்வித மாற்றுக்கருத்தையும் கொண்டிருக்கவில்லை.

எல்லா இடங்களிலும் நீர்சார் நெருக்கடிகள் சுட்டிக்காட்டப்பட்டன. அவற்றில் நிலத்தடி நீர் உவராதல், வெள்ளத்தால் பயிர் அழிதல், குடிநீர் பற்றாக்குறை என்பன மிக முக்கிய நெருக்கடிக்களாகக் குறிப்பிடப்பட்டதுடன் எதிர்காலம் இன்னும் கடினமானதாக மாறக்கூடும் என்ற ஐயமும் அதிகமாக உணரப்பட்டது.

இந்தப் பயணம் எமது ஆய்வுக்குழுவின் பார்வையில் மேலுமொரு பரிமாணத்தையும் வெளிப்படுத்தி நின்றது. உண்மையில் நீர்தான் பிரச்சினைக்குரியதா அல்லது வழுக்கியாற்றின் வகிபாகத்தை மனித சமூகம் மறந்து போய் அல்லது புரிந்துகொள்ளாமல் வேறு வாழ்வியலை மேற்கொண்டு வருவதுதான் பிரச்சினையா என்ற கருத்தியல் மேலதிமாக ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டியதாக உணரப்பட்டது. வழுக்கியாற்றை வெறுமனே மாரிகால வெள்ள வாய்க்கால் என்று கடந்துவிடும் சமூகத்திற்கு வழுக்கியாறு மாரிகாலத்திலும் பல அடுக்குகளைக் கொண்ட ஒருங்கிணைக்கப்பட்ட நீர்முகாமைத்துவத்தைக் கொண்டிருந்ததோடு கோடைகாலத்தில் நீரைத் தேக்கி வைக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட நீர்ப் பிடிப்பு பகுதியாக தொழிற்பட்டிந்த வரலாறுகளை மூத்தவர்கள் கருத்துகளில் இருந்து உணர முடிந்தது.

நீரின் வளத்துக்கு உகந்த வகையில் கடந்த காலங்களில் எம்மிடம் பயிர்வகைத் தெரிவுகள் இருந்திருக்கின்றன. ஆடி உழவு தேடி ஆழ உழுத சமூகமாக நாங்கள் இருந்திருக்கிறோம். இப்போது நவீன பயிர்களும் பயிர்ச்செய்கை முறைகளும் வந்துசேர்ந்திருக்கின்றன. பெரிய வெள்ளை மொட்டைக்கறுப்பன் நெல்லினம் போய் ஈரநில ஹைபிரிட் நெல்லினங்களுக்கு மாறியிருக்கின்றோம். பண்டைய உயரமான நெல்வகைகளோடு அதிக வெள்ளத்தைத் தேக்கி கையாண்ட சமூகம் இன்று செய்கை செய்யப்படும் பணப் பயிர்களின் தேவைக்கேற்ப வெள்ளத்தை விரைவாக வெளியேற்றும் அணுகுமுறைகளைக் கையிலெடுப்பதை அவதானிக்கமுடிகிறது. ஓரிடத்தில் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படும் இரசாயனப் பசளைகள் நீருடன் வந்து இன்னொரு குளத்தில் களைகளின் அளவுக்கதிகமான வளர்ச்சியில் தாக்கம் செலுத்துகின்றன!

வழுக்கியாற்றின் நீரேந்து பகுதியின் பல வெள்ள வாய்க்கால்கள் வீதிகளாக மாறி வெள்ளத்தை வேகமாக வயல்களுக்குள் அனுப்புவதை உணர முடிந்தது. பூர்வீகமாக நீண்ட தூரம் வெள்ளவாய்க்கால்கள் ஊடாக நீரை மண்ணுக்குள்ளும் மெல்ல மெல்ல செலுத்தியபடியே குளங்களை வந்தடையும் வெள்ளம் இப்போதெல்லாம் சிமெந்து பூசிய கால்வாய்களூடும் தார் பூசிய வீதிகள் அதாவது முன்னாள் வெள்ள வாய்க்கால்கள் வழியிலும் கடுகதியில் குளங்களை நிரப்புகின்றன என்பதை கள அவதானிப்புகளில் உணரமுடிகின்றது. வழுக்கி ஆற்றின் நீரேந்து பகுதியின் அபிவிருத்தி என்ற பெயரில் எடுக்கப்படும் முடிவுகளில் நீருக்கு வழங்கப்படும் மதிப்பு கணிசமாகக் குறைந்து சில இடங்களில் கைவிடப்பட்டும் இருப்பது வழுக்கி ஆற்றின் களச்சூழலை மாற்றியமைத்துக் கொண்டிருப்பதை அவதானிக்கமுடிகிறது. வழுக்கியாற்றின் நீரேந்து பகுதியின் ஏதோ ஒரு மூலையில் ஒரு தனி மனிதனோ அல்லது ஓர் அரச நிர்வாகக் கட்டமைப்போ அல்லது தனியார் நிறுவனமோ நீரை பற்றிக் கருத்தில் எடுக்காமல் எடுக்கும் முடிவு வழுக்கியாற்றின் வழியெங்கும் தாக்கம் செலுத்துவதைத் தெரியாமலே வளர்ச்சி மேற்கொள்ளப்படுகிறது. அதில் மிக அதிகமாக வழுக்கியாற்றின் நீரேந்து பகுதியில் அதிவேகமாக பரவி வரும் குழாய்க்கிணறுக் கட்டுமானங்களும் தொலைந்து வரும் கிணற்றுப் பாவனையும் ஒரு பக்கமாக நெருக்க உவர் நீராதலைத் தடுத்தலை அடிப்படையாகக் கொண்ட பல்லாயிரம் வருடப் பழமைவாய்ந்த பாரம்பரிய நீர்முகாமைத்துவத்தின் அடிப்படைகளை குழி தோண்டிப் புதைக்கும் வேலை மறுபக்கத்தில் நடந்து கொண்டிருப்பதனை பலரது கருத்துகள்மூலம் உணரமுடிந்தது.

ஆங்காங்கே உவர் நீர் பிரச்சினைகள் இருந்தாலும் நீரைப் பகிர்ந்துண்டு முற்று முழுதாக எமது பிரதேசத்தின் நீர் வளத்தில் தங்கி இனிதே வாழ்ந்த இந்நாட்டு சமூகத்தில் நீர் விற்பனை நிலையங்கள் பல முளைத்திருந்தன. வெளிப்பிரதேசங்களில் இருந்து நீரைக் கொண்டு வந்து நீர் நெருக்கடியைத் தீர்க்கவென பொருத்தப்பட்ட குழாய்களும் துருப்பிடிக்க ஆரம்பித்திருந்தது. நீர் மாறியதால் நமக்கு நெருக்கடியா? அல்லது நாம் மாறிவிட்டதால் நீர் நெருக்கடியா? என்ற பெரியொரு கேள்வியே பயணத்தின் இறுதியில் நம் கண்முன்னே நின்றது.

ஒருவேளை நாம் மாறிவிட்டதால் தான் நீர் நெருக்கடியாகியதென்றால் மீண்டும் நம்மை நாம் மாற்றுவதால் மட்டுமே இந்த பிரச்சினையைத் தீர்க்கமுடியுமோ என்ற சிந்தனை மேலோங்கி நிற்கிறது. நீருக்கும் மக்கள் சமூகத்துக்கும் இடையேயான பிணைப்பு நவீன யுகத்தில் சிக்கலாக்கப்பட்டுள்ள இன்றைய பிரச்சினையை நாம் எல்லோரும் ஒரு சமூகமாகச் சேர்ந்து தான் தீர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் எமது WASPAR திட்டத்தின் ஆய்வும் தொடர்ந்து நகரும்! மாற்றம் வேண்டிய பயணங்கள் தொடரும்!

நீர்த்துறை நிபுணர்களும், அரச நிர்வாகக் கட்டமைப்புகளும், உழவர் சமூகமும், மக்கள் வட்டங்களும் மீண்டும் மீண்டும் கூடிக் கலந்துரையாடும்போது பொதுவான புரிதல் அதிகரிக்கும். வழுக்கியாற்றின் வகிபாகத்தை முழுமையாக அனைவரும் புரிந்துகொள்ளும் புதியதொரு விஞ்ஞானம் மலருமாயின் வழுக்கியாறு மீண்டும் புதுப்பொலிவு பெறும்! வாழ்வும் வளமாகும்!

*எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி துளியின் 15 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடிவரும். வடமாகாணத்து நீர்வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:* **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna;** *மின்னஞ்சல்:* **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்



**சி.துர்க்கா**
12 Maths
யா/இந்துக் கல்லூரி




**அனகா**
தரம்-02
ஏஞ்சல் இன்டர்நஷனல் பாடசாலை



**அபிஷயா**
A/L( 2027)
யா/இணுவில் மத்திய கல்லூரி




# எலியும் பாலும்

பசி தாங்கமுடியாத எலிகள் இரண்டு தாங்கள் ஒளிந்திருந்த வீட்டின் சமையல் அறைக்குள் புகுந்தன. அங்கே ஒரு பெரிய பானை நிறையப் பால் இருப்பதைக் கண்டன. ஆனால் அது உயரமான பானை. இதனால் பாலைக் குடிக்க முடியாமல் எலிகள் திண்டாடின.

இதையடுத்து இரு எலிகளும் ஒரு முடிவுக்கு வந்தன. ஓர் எலியின்மீது இன்னோர் எலி ஏறிப் பாலைக் குடிப்பது. அதன் பிறகு கீழே உள்ள எலி மேல் ஏறிப் பாலைக் குடிக்கலாம் எனத் திட்டமிட்டு, அதைச் செயற்படுத்தின. அதன்படி மேலே உள்ள எலி பாலைக் குடித்தபோது, கீழே இருந்த எலி கத்தியது: "போதும்! நான் பால் குடிக்கவேண்டும்..." கீழே இருந்த எலி போட்ட சத்தத்தைக்கேட்டு மிரண்டு மேலே இருந்த எலி, பால் பானைக்குள் விழுந்துவிட்டது.

இதைக்கண்ட கீழே இருந்த எலி, "நல்லது, இனி எனக்குத்தான் எல்லா பாலும்" என்று நினைத்தது. பிறகு அந்தப் பானையைச் சுற்றிச் சுற்றி வந்தது. ஆனால் மேலே ஏற முடியவில்லை. கடைசியில் பசியால் அது செத்து மடிந்தது.

**துன்பத்தில் இருந்து விடுதலை அடைய மற்றவர்களின் ஒத்துழைப்புத் தேவை.**



**து.ரினோஜ்**
தரம் - 10
சைவ வித்தியா விருத்திச் சங்கம்.
திருநெல்வேலி



**சதா விஷ்ணு விகாசன்**
தரம் -6
யா/மத்திய கல்லூரி




**சு. ஆதிரன்**
தரம் 2D
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

**வி.லஜசன்**
தரம் -9
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி





**எஸ்.பிரணவன்**
தரம் -7E
யா/இந்துக் கல்லூரி



**ர.யனோசிகா**
தரம் - 6A
யா/கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை

**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௩

# செம்மணி; முடிவுறாப் புதைகுழிகளின் கதை

ஜெரா

(சென்றவாரத் தொடர்ச்சி)

புதைகுழிகள் அடையாளம் காட்டப்பட்ட பின்னரும் அப்போதிருந்த இலங்கை அரசு பெருங்கால நீடிப்பைத் திட்டமிட்டு உருவாக்கியிருந்தது. உள்நாட்டு அரசியல் கட்சிகளும், பாதிக்கப்பட்ட மக்களும், மனித உரிமை அமைப்புகளும், சர்வதேச மன்னிப்புச் சபையும் முன் வைத்த கோரிக்கைகளுக்கும், போராட்டங்களுக்கும் நீண்டகால மாக அரசு பதிலளிக்கவில்லை. விசாரணை, நீதிமன்றத்தீர்ப்பு, குற்றவாளிகளின் உடல்நிலை பாதிப்பு, சரியான நிபுணர்கள் இல்லை, தோண்டுவதற்குரிய காலநிலை இன்னும் வரவில்லை எனப்பல காரணங்கள் முன்வைக்கப்பட்டன.

ஆயினும் சர்வதேச மன்னிப்புச்சபையும், பிற ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளும் பிரயோகித்த அழுத்தத்திற்கு இலங்கை அடிபணிந்தது. அதைவிட கிருஷாந்தியின் சார்பில் வழக்கை முன்நின்று நடத்திய குமார் பொன்னம்பலம் போன்ற சட்டத்தரணிகள் அப்போதைய ஆளுந்தரப்பிடம் செல்வாக்கு செலுத்தக்கூடியவர்களாகவும். நேரடித் தொடர்புகளைக் கொண்டிருந்தவர்களாகவும் இருந்தனர். அரசிடம் அவர்களுக்கு இருந்த செல்வாக்கின் காரணமாகவும் இந்த விடயத்தை மூடிமறைக்க முடியவில்லை. விசாரணைக் குழுக்கள் தொடர்ச்சியாக இயங்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.



இந்தக் கூட்டு அழுத்தங்களின் விளைவாக 1999ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி செம்மணி மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் பணி ஆரம்பமாகியது. அமெரிக்க நிபுணர்கள், சர்வதேச மன்னிப்புச்சபை. ஏசியா பௌண்டேசன் அதிகாரிகள், துறைசார்ந்த பேராசிரியர்கள், பொதுமக்கள், உள்ளூர் அதிகாரிகள், அமைப்புகள், சர்வதேச ஊடகங்கள் என்பன இந்த அகழ்வுப்பணிகளைக் கண்காணிப்பதில் முன்னிலை வகித்தன. சோமரத்ன ராஜபக்ச முதலில் ஒரு புதைகுழியை அடையாளம் காட்டினார். முதல் கட்டமாக அவர் காட்டிய இடத்திலிருந்து 2 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் ஒன்றில் கைகள் இரண்டும் கட்டப்பட்டிருந்தன. மற்றைய எலும்புக்கூடு சேதம் அடைந்திருந்தததால் கைகள், கண்கள் கட்டப்பட்டிருந்தனவா என்பதை அறிய முடியவில்லை. கண்கள், கைகள், கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட எலும்புக்கூட்டின் மண்டையோட்டுப் பகுதியில் காணப்பட்ட ஆழமான சிதைவுகள் அடித்துத் தாக்கப்பட்டதால் ஏற்பட்டவையாக இருக்கலாம் என்று கணிக்கப்பட்டது. இரண்டு எலும்புக்கூட்டிலும் அடி காயங்கள் தாராளமாகக் காணப்பட்டன. ஒரு எலும்புக்கூடு நிமிர்ந்தும் மற்றையது பக்கவாட்டிலும் படுத்திருப்பது போன்று போடப்பட்டிருந்தன. இரண்டு எலும்புக்கூடுகளுக்கும் நடுவில் சிலிப்பர் கட்டைகள் காணப்பட்டன.

இந்த எலும்பு மீட்புப்பணிகள் அதிககாலம் நீடிக்கவில்லை. இரண்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதோடு புதைகுழி தோண்டும் படலம் இடைநிறுத்தப்பட்டது. தமது பிள்ளைகளின் எலும்புகளைத்தேடி செம்மணிப் புதைகுழிக்கு வந்திருந்த பெற்றோர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இந்த எலும்பு ஆதாரங்கள் யாழ்ப்பாணத்தை மனிதப் புதைகுழியின் நகராக்கியது. தென் ஆசியாவிலேயே அதிகளவாக மக்கள் கொன்று புதைக்கப்பட்ட இடமாக செம்மணிப் புதைகுழியை ஊடகங்கள் அடையாளப்படுத்தின. புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளுக்கு மறுநாளே உரிமைகோரல்களும் யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியிலிருந்து எழுந்தன. அரியாலையில் இருந்த இயந்திரத்திருத்தகம் ஒன்றில் வேலை செய்துகொண்டிருந்த வேளையில் காணாமல்போன இரு இளைஞர்களின் எலும்புகளாக அவை இருந்தன. 1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி இருவரும் வேலை முடித்து வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோது இராணுவத்தால் கைதாகிப் பின்னர் காணாமல் போயிருந்தனர்.

அதன்பின்னர் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் பற்றிய அறிக்கைகள் அடிக்கடி வெளியாகின. பல்வேறு தரப்பட்ட அரசியற்கட்சிகளும், உள்ளூர், சர்வதேச அமைப்புகளும் அதில் அடக்கம். ஏனைய சிப்பாய்களையும் செம்மணிக்குக் கூட்டிவந்து மனிதப் புதைகுழிகளை அடையாளம் காட்டச் செய்யவேண்டும் என்ற முடிவும் எடுக்கப்பட்டது. பக்கச்சார்பற்ற, நீதியான, விசாரணைகளை மேற்கொள்வதோடு, அனைத்துப் புதைகுழிகளையும் தோண்டி உண்மையைக் கண்டறியுமாறு செம்மணி வந்து திரும்பிய சர்வதேசப் பிரதிநிதிகள் கொழும்பில் அறிக்கைவிட்டனர். அதன் பின் அவர்களும் வாய்திறக்கவில்லை. பின்னைய நாள்களில் இந்தச் செய்திகளின் சூடு எப்படியோ குறைந்தது.

விசாரணைக்குழுக்கள் அடிக்கடி வருவதாகவும், செம்ரெம்பர் 6 ஆம் திகதி மறுபடியும் தோண்டப்படும் எனவும் ஓர் அறிக்கை அரச தரப்பிலிருந்து விடப்பட்டது. அதன்படி குறித்த திகதியில் மீண்டும் தோண்டும் பணிகள் ஆரம்பமாகின. அமெரிக்கப் பிரதிநிதிகள் எலும்பு மீட்புப் பணிகளைக் கண்காணிக்க வந்திருந்தனர். இறுதியில் முடிவுகள் எதுவும் காட்டாமலேயே இந்த விவகாரம் மந்தமாகியது. பின்னர் எதிராளிகளின் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு விசாரணை அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. அதன் பின்னர் நடந்த புதைகுழி தோண்டலில் அதிகளவில் சேதமடைந்திராத எலும்புக்கூடுகள் இரண்டை மறுபடியும் நிபுணர்கள் கண்டுபிடித்தனர். ஆனால் அவை யாருடையவை என்பதை அடையாளம் காணமுடியவில்லை. மூன்றாம் நாள் கண்டி வீதி நல்லூர் நாயன்மார்கட்டு சந்திவீதி மூலையில் இருந்த இராணுவக் காவலரணின் பின்புறத்தில் மூன்று எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன. அருகருகே புதைக்கப்பட்ட நிலையில் ஆடைகள் ஏதுமற்றநிலையில் ஓர் இளம் பெண் மற்றும் ஆண் ஆகியோரின் எலும்புக் கூடுகளாக அவை இருந்தன. கொழும்புத்துறைப் பகுதியில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தபோது கைதுசெய்யப்பட்ட தம்பதியினரின் எலும்புக்கூடுகளாக இவை இருக்கலாம், அவற்றின் மண்டையோடுகள் பிளந்து காணப்பட்டன. தலையில் அடித்துத் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட வெடிப்பாக அவையிருக்கலாம் என சட்ட மருத்துவத்துறை நிபுணர் பேராசிரியர் நெரியெல்ல குறிப்பிட்டிருந்தார்.

தொடர்ந்து புதைகுழி தோண்டும் பணிகள் நடந்தன. சாட்சியாளர்கள் காட்டிய சில இடங்களில் எலும்புக்கூட்டுத் தடயங்கள் எதுவும் இருக்கவில்லை. 20 பேரைப் புதைத்தனர் என்று சோமரத்ன ராஜபக்ச தெரிவித்திருந்த இடமும், கிணறும் தோண்டப்பட்ட போதிலும் அங்கு எலும்புக்கூடுகள் எவையும் இருக்கவில்லை. இதனால் சோமரத்ன மறுபடியும் செம்மணிக்கு அழைத்துவரப்பட்டார். அப்போது அவர் சொன்ன பதிலோடு, தோண்டும் பணிகள் நிறுத்தப்பட்டன.

"செம்மணி மற்றும் அரியாலைப் பகுதிகளில் மனிதப் புதைகுழிகள் உள்ள சரியான இடங்களையே நான் அடையாளம் காட்டினேன். அந்தப் புதைகுழிகளை தோண்டியபோது அங்கு சடலங்கள் காணப்படாததையிட்டு நான் அதிர்ச்சியடைகிறேன்"

அதுவரையில் செம்மணியில் இருந்து 15 வரையிலான சடலங்களின் எலும்புகள் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அத்தோடு தோண்டும் பணிகள் நிறுத்தப்பட்டன. அதே வருடத்தில் டிசெம்பர் 6 ஆம் திகதி இதுவரையில் செம்மணியில் நடத்தப்பட்ட புதைகுழி ஆய்வு தொடர்பிலான அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

காலநிலை மாறியது. களநிலைவரங்கள் மாறின. அடித்த மழையிலும், வன்னியில் எழுந்த போர் அலைகளிலும் எல்லாமே மறக்கப்பட்டன. 2000ஆம் ஆண்டுகளுக்குப் பின்னரான ஆட்சி மாற்றமும் சமாதானமும் இந்தப் பெரியளவிலான மனிதப் படுகொலையை மறக்கச் செய்தன.

சோமரத்னவின் மரணதண்டனை பற்றிய செய்தியொன்று கடந்த வருடத்துக்கு முற்பகுதியில் வெளியானபோது அதைப்படித்ததாக நினைவு. அவரோடு கைதானவர்கள் எங்கே? என்ன நடந்தது போன்ற கேள்விகளும், செம்மணியில் புதைக்கப்பட்டவர்களின் நினைவைப்போல மறந்தேபோயிற்று. உலகளவில் நிரூபிக்கப்பட்ட இந்தக் குற்றம் அல்லது இனமொன்றை கூட்டுப் படுகொலை செய்தமைக்கான ஆதாரம் செம்மணிப் புதைகுழிக்குள்ளும் வருகின்றது. இதில் ஈடுபட்டவர்கள் சர்வதேச குற்றவியல் மன்றங்களில் விசாரிக்கப்படுவதும் தண்டனைக்குள்ளாவதும் அண்மைக்காலம் வரை நடந்துகொண்டேயிருக்கின்றது.

ஆனால் உலகின் கண்முன்னே, அமெரிக்காவின் கண்முன்னே சாட்சிபூர்வமாக நிரூபிக்கப்பட்ட செம்மணி மறக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. இது இலங்கையில் இடம்பெற்ற உள்ளக விசாரணையொன்றின் நம்பிக்கைத் தன்மையினையும், பொறுப்புக்கூறும் போக்கையும் எடுத்துக்காட்டவும் கைவசமுள்ள சிறந்த ஆதாரங்களில் ஒன்று.

## பிற்குறிப்பு

அன்புள்ள அம்மா.

*நீங்கள் அனுப்பிய கடிதத்தை வாசித்தேன். கடிதத்தின்படி யாழ்ப்பாண மக்களின் மனவேதனைகளை என்னால் நன்கு உணரமுடிகின்றது. அதுமாத்திரமல்ல, இதுபோல் காணாமல்போனதாகக் கூறப்படும் பல இளைஞர்கள் பற்றிய விவரங்களையும் நான் அறிவேன். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி நானும் என்னுடன் சிறைவைக்கப்பட்டுள்ள உதவியாளர்களும் நன்கறிவோம். இருப்பினும் எனது உதவியாளர்களின் நிலைமையோ கவலைக்கிடம்.*

*மேஜர் வீரக்கொடி, கப்டன் லலித் ஹேவா மற்றும் அவர்களுக்குகீழ் பணியாற்றிய இளைய அதிகாரிகளே இந்த அநியாயங்களுக்குப் பொறுப்பானவர்கள். கிருஷாந்தி மற்றும் அவரதுகுடும்ப உறுப்பினர்களின் படுகொலைகளுக்கும் இந்த அதிகாரிகளே பொறுப்பாவார்.*

*அம்மா! உங்கள் மகன் காணாமல்போன சம்பவத்திற்கும் கப்டன் ஹேவாவுக்கும் நேரடித் தொடர்பில்லை. உங்கள் மகன் பற்றி நான் எனது நண்பர்கள் மூலமாக விசாரித்தேன். உங்கள் மகன் விரைவில் அளுக்கடை நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளார். உங்களால் முடிந்தால் அநுராதபுரம் சென்று உங்கள் மகனைப் பற்றி விசாரித்தறிய முயற்சிக்கவும். இதுதொடர்பாக முடிந்தளவு உதவியை நான் செய்வேன்.*

*அத்துடன் நான் தங்களிடமிருந்து ஒரு சிறுஉதவியை எதிர்பார்க்கிறேன். அந்த நகைக்கடைப் பொடியனிடம் நான் நகைகள் வாங்கியது பற்றி கூறி அந்த நகைகளை வாங்கியதற்காக, "பில்"ஒன்றைப் பெற்று எனக்கு விரைவில் அனுப்பிவையுங்கள். அவரது தந்தையிடம் முழுவிவரங்களையும் கூறுங்கள். கடந்தகாலங்களில் இடம்பெற்ற பல விடயங்கள் குறித்து மனவேதனையடைவதுடன் அவற்றுக்காக மன்னிப்புக் கோருகின்றேன்.*

தங்களின்
சம்பத்

(குறிப்பு – இந்தக் கடிதத்தில் சோமரத்ன ராஜபக்ச "சம்பத் என ஒப்பமிட்டுள்ளார். அவரை அவரது வீட்டில் செல்லமாக சம்பத் என்றே அழைப்பார்களாம். செம்மணியில்இருப்பதாக நம்பப்படும் பெரும் மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பாக யுக்திய" வார இதழில் வெளியான கடிதத்தின் தமிழாக்கம். கிருஷாந்தி குமாரசுவாமி வன்புணர்வு, கொலை வழக்கின் முதலாவது குற்றவாளியும், செம்மணி மனிதப் புதைகுழிகள் பற்றிய தகவல்களை வெளியிட்டவருமான சோமரத்ன ராஜபக்ச 1997 ஓகஸ்ட் மாதத்தில் காணாமல் போன ஒருவரின் தாய்க்கு ஆங்கிலத்தில் எழுதிய கடிதம்)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்.முபாறக்

# அறிந்தும் அறியாமலும்

## சஜித்தும் சிறைக்கு ?

ரணில் அண்மையில் நடத்திய கட்சிச் சந்திப்பின் போது கைதுசெய்யப்படவுள்ளோர் பட்டியலுக்கு மேலதிகமாகவும் சிலரது பெயர்கள் அம்பலப்படுத் தப்பட்டன.

அதில் ஒன்றுதான் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரே மதாஸவின் பெயர்.

அந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட ஒருவர் 'சஜித் தும் லேசில தப்ப ஏலாது. அவருக்கும் சிக்கல் இருக்கு' என்றார். கலாசார நிதியம் தொடர்பில் அவர்மீது குற்றச்சாட்டு ஒன்று உள்ளது. அதை விசா ரிப்பதற்கு அரசு தயாராகிவருகிறது. குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் சஜித்தும் சிறைக்குச் செல்வார் என்று அங்கு அவர்கள் பேசிக்கொண்டார்களாம்.

## கில்லாடி ரணில்

சில நாள்களுக்கு முன் ஐக்கிய தேசியக் கட் சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க் கட்சிகளின் பிரதிநிதிகளைத் தனித்தனியாக அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின் நோக்கம் எதிர்க்கட்சி களின் முன்னாள் மற்றும் இந்நாள் எம். பி.க்களை சிறைக்குள் தள்ளுவதற்கு இந்த அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கை பற்றி எச்சரிக்கை செய்யத்தானாம்.

விரைவில் கைது செய்யப்படவுள்ளவர்களின் விசாரிக்கப்படவுள்ளவர்களின் பெயர்ப் பட்டி யலை அங்கு ரணில் அம்பலப்படுத்தினா ராம். அரசுக்குள் இருந்தே இந்தப் பட்டியலை ரணில் தூக்கியுள்ளார் என்று ஐ.தே.க வட்டா ரம் கூறுகிறது. அந்தளவுக்கு இன்னும் ரணில் கில்லாடியாகத்தான் இருக்கின்றார்.






## பூரண சுகம்

ஓரிரு வாரங்களாக மஹிந்த ராஜபக்சவைக் காண முடியவில்லை. அதற்குக் காரணம் அவரது இரண்டு கால்களிலும் ஏற்பட்ட உபாதைதானாம். இப்போது பூரணமாக குணமடைந்துவிட்டாராம். இரண்டு கால் களிலும் சுயமாக எழுந்து நிற்க நடக்கமுடிகிறதாம்.

முதலில் அடுத்தவர் உதவியை நாடியவர். இப்போது தானாகவே செயற்படத் தொடங்கியுள்ளாராம். கடந்த வாரமே அவரது அரசியல் செயற்பாட்டில் தீவிரமாகக் குதித்துள்ளார் என்று மொட்டுக்கட்சிக்கா ரர்கள் மகிழ்கிறார்கள். கட்சியின் மாத்தறை மாவட்ட உறுப்பினர்களைச் சந்தித்து மஹிந்த கடந்தவாரம் பேசியுள்ளார்.

இனித் தொடர்ச்சியாக அவரை வெளியில் காணமுடி யும் என்றும் தீவிர அரசியல் செயற்பாட்டில் ஈடுபடு வார் என்றும் மஹிந்த தரப்பு கூறுகிறது.



## ஷாருக்கானுக்கு ஒரு மில்லியன் டொலர்

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி கொழும்பில் கஸினோ ஒன்று திறக்கப்படவுள்ளது. மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் பெரும் சர்சையைக் கிளப்பிய விவகாரம் இது.

எதிர்க்கட்சிகள், பௌத்த தேரர்கள் ஆகியோரின் எதிர்ப்புக் கார ணமாக இதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அதன்பின் மைத் திரியின் ஆட்சியிலும் இதற்கு அனுமதி வழங்குவதற்கு ரணில் தரப்பு நடவடிக்கை எடுத்தது. ஆனால், அப்போதும் தேரர்களிடம் இருந்து எதிர்ப்பு வந்ததால் மைத்திரி அதற்கு அனுமதி வழங்க வில்லை.

ஆனால், இப்போது அந்த கஸினோவுக்கு அனுமதி வழங்கப் பட்டு திறக்கப்படவுள்ளது. திறப்பு விழாவில் ஹிந்தி நடிகர் ஷாருக்கான் கலந்துகொள்ளவுள்ளார். அதற்காக அவருக்கு வழங்கப்படும் சம்பளம் ஒரு மில்லி யன் அமெரிக்க டொலராம் .


## ஒளிந்த மஹிந்த

அண்மையில் மொட்டுக் கட்சியின் முன்னாள் எம்.பி. காமினி லொக்குகே உயிரிழந்திருந்தார். அவரின் இறுதிக்கிரியை கெஸ்பாவவில் உள்ள அவரது வீட்டில் இடம்பெற்றது.

அதில் அரசியல் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். மஹிந்த ராஜபக்சவும் கலந்து கொண்டார். அவரைக் கண்டதும் அங்கு கூடி நின்ற மக்கள் ஓடி வந்து அவருடன் செல்பி எடுக் கத் தொடங்கினர். இதனால் மரண வீடென்பதை மறந்து கல்யாண வீடுபோல் ஆகிவிட்டது அந்த இடம். இதைத் தவிர்க்கமுடியாதநிலை மஹிந்தவுக்கு. பெரிய சங்கடம்.

இதை அவதானித்த சிலர் அந்த வீட்டின் தனி அறை ஒன்றுக்குள் மஹிந்தவைக் கூட்டிக்கொண்டு போய் தங்கவைத்தனர். இறுதிக்கிரியை முடிந்து சடலத்தை மயானத்துக்குக் கொண்டுசெல்லும்வரை மஹிந்த அந்த அறைக்குள்ளேயே ஒளிந்திருந்தாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பாவிப் பொதுமக்களுக்கு...!

மல்லுக்கட்டி, தாச்சி மறிச்சு, குழிபறிச்சு, குத்திமுறிஞ்சு ஒரு மாதிரி உள்ளூராட்சிசபையை அமைச்சாச்சு. ஆனால் சபையைக் கைப்பற்றுறதிலை இருந்த வேகம் செயற்பாட்டிலை இல்லைப் போல இருக்கிது. எலக்சனுக்கு முன்னம் இருந்த நிர்வாகம் மாதிரித்தான் இப்பவும் இருக்கு. றோட்டெல்லாம் இப்பவும் குப்பையாத்தான் இருக்கு. லைற்றுகள் சிலது செத்தது செத்தமாதிரித்தான் இருக்கு. றோட்டுக் கரையிலை லைசன்ஸ் இல்லாத கடையள் கனக்க இருக்கு. அதுகும் யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள்ளை போனால் ஏதோ ஆப்ஹானிஸ்தானுக்குள்ளை போன மாதிரிக் கிடக்கு. அந்தளவுக்கு குப்பை. தயவு செய்து 'அன்னமுத்து அண்ணை நீ ஆப்ஹானிஸ்தானைப் போய் பாத்தனியோ ?'எண்டு மட்டும் கேக்காதையுங்கோ. அதைத்தானே ரீவியிலை வடிவாப் பாக்கலாம்.




உள்ளூராட்சிசபை உறுப்பினர்கள் தங்கடை எல்லைக்குள்ளை உள்ள இடங்களிலை இருக்கிற குறைநிறைகளைப் பற்றிக் கதைச்சு அதைச் சீர்செய்யவேணும் எண்டுதான் நீங்கள் அவையளுக்கு வாக்குப் போட்டனியள். அதுக்கை போய் நிண்டுகொண்டு மல்லுக் கட்ட, கொளுத்தாடு பிடிக்க, பெலத்தைக் காட்ட அவையளை நீங்கள் அனுப்பேல்லை.

ஆனால் இப்ப பாக்கேக்கை உள்ளூராட்சிசபை எண்டால் என்ன? அதின்ரை சேவை என்ன? அதுக்கான வரையறை என்ன? பொறுப்பென்ன? எண்ட ஒரு மண்ணாங்கட்டியும் தெரியாமல்தான் கனபேர் உதுக்கை போயிருக்கினம். நீங்களும் தெரிஞ்சவன் நல்லவன் சொந்தக்காரன் எண்டு வோட்டைப்போட்டு அனுப்பிப்போட்டியள். ஆனால் சிலபேர் விசயம் தெரியாமல் போய் சபை கலையும் வரையும் கதிரைக்குப் பாராமா இருக்கிறதோடை மட்டுமில்லாமல் கடைசிவரை ஒண்டும் செய்யாமல் இருந்திட்டுப் போகப் போயினம் போலை கிடக்கு. அதோடை வோட்டுப் போட்ட உங்களுக்கு உப கதை சொல்லி அநுர அரசிலை பழியைப்போட்டிட்டுத் தப்பிக்கொண்டு போகப்போயினமோ தெரியாது.. அதுதான் நடக்கப்போகுது. பொறுத்திருந்து பாருங்கோவன்!

அதுமட்டுமில்லாமல் உள்ளூராட்சிசபை குப்பை எடுக்கிறதுக்கும், லைற்றுப் போடுறதுக்கும், வியாபார லைசென்ஸ் குடுக்குறதுக்கும், சோலைவரியளை வாங்கிறதுக்கும் மட்டும் தான் இருக்குது எண்டதுதான் கனபேற்றை விளக்கம்.

அதுக்கும் அப்பாலைபோய் ஒரு குட்டி அரசாங்கத்தைப்போலை இயங்கவேணும், எல்லாத்தையும் சமமா நிர்வாகம் செய்யவேணும் எண்டதுதான் சபையளை உருவாக்கினதின்ரை நோக்கம். உண்மையிலை நீங்கள் உங்களை ஆளவேணும், மக்களாலை மக்கள் ஆளப்பட வேணும் எண்ட அடிப்படையிலைதான் உள்ளூராட்சி சபையின்ரை உருவாக்கம் இருந்தது. இப்ப கட்சிக்காரர் தங்களுக்கரிய பலப்பரீட்சைக் களமா அதை ஆக்கிப் போட்டினம்.

ஆனபடியாலை இப்ப நீங்கள் என்ன செய்யவேணும் எண்டால் உங்கடை கட்சி ஆக்களிட்டைச் சொல்லி சபைக்குத் தெரிவானவைக்கு உள்ளூராட்சிசபை பற்றின அதிகார அறிவூட்டலைச் செய்ய வேணும். அதின்ரை பலத்தை அவைக்கு விளங்கப்படுத்த வகுப்பெடுக்க வேணும் எண்டு சொல்லுங்கோ.

அடுத்ததா ஒரு பெரும் பொறுப்பையும் உங்கடை தலையிலை வைக்கப்போறன்.

செம்மணிப் புதைகுழியைப் பாத்த உடனை வலிய வந்து,கெம்பி எழும்பி ஒண்டு கூடி அதை ஓர் இயக்கமா நிண்டு ஓர் அணியிலை எல்லாரையும் திரட்டின 'மக்கள் செயலுக்கு' எனது நன்றி. உண்மையிலை அவையைப்போல ஆக்கள்தான் இப்ப உங்களுக்குத் தேவை.

நீண்டகாலமாக நிண்டு செயற்பாடுகளைச் செய்து சாதிச்ச ஓர் இயக்கத்தைப்போலை குறுகின கால அவகாசத்துக்கை எல்லாத்தையும் செய்து முடிச்சு தமிழ் சனத்துக்கு நம்பிக்கையை அவையள் குடுத்திருக்கினம்.. அதோடை கைதட்டுகளையும் வேண்டிப்போட்டினம். அது மட்டுமில்லாமல் சர்வதேசப் பிரதிநிதி ஒருவரின்ரை கவனத்தை ஈர்த்து அவரை எப்படிக் கையாள வேணும் எண்ட அனுபவமும் வாய்ப்பும் அவையளுக்குக் கிட்டி இருக்கு. அது ஒரு பிளஸ் பொயின்ற் எண்டு சொல்லுவன்.

அதோடை பயிரை அழிக்கிற கிருமியளை மருந்தடிக்காமல் எப்பிடிக் கட்டுப்படுத்தலாம் எண்டதையும் அவை செய்து காட்டிப்போட்டினம்.

ஆனாலும் ஒரு விசயத்திலை அவை கவனமாக இருக்கவேணும். அவையளைப் போலை முன்னமும் தாணா வலியவந்து ஒரு அமைப்பையே கட்டமைச்சு மக்கள் பேரவையாச் செயற்பட்டவையே எடுத்து விழுங்கினவங்கள். தமிழ் மக்கள் சார்ந்த பொதுவானவை நாங்கள்,தமிழற்றை சிவில் சிக்குறிட்டியள் நாங்கள், எங்களிட்டைத்தான் தமிழற்றை மெயின் சுவிச் இருக்கு எண்டு வேட்டி கட்டிக்கொண்டு வாற பிரகண்டங்கள் பற்றித்தான் கவனமாக இருக்க வேணும். உவங்கள் லேசுப்பட்ட ஆக்கள் இல்லை. போன எல்லா எலக்சனுக்குள்ளையும் மூக்கை ஓட்டிச் சதிராடினவங்கள். நல்லாக் கதைப்பாங்கள். நல்லா நடிப்பாங்கள். சீனுக்கு வராமல் ஒண்டை எப்பிடிச் சாதிக்கிறதெண்டு உவங்களுக்கு நல்லாத் தெரியும். அதாலை கவனம் தம்பியவை.

இப்படிக்கு
அப்பாவி அன்னமுத்து




## குறும்பட விமர்சனம்

O பானுஷா

"செம்மணி" என்ற பெயரைக் கேட்டதும் மனதில் ஒருவித கலக்கமும் கடந்தகால நினைவுகளும் அலைமோதத் தொடங்கின. ஆனால், 2025 இல் வெளியான இந்தக் குறும்படம் அந்தப் பெயரை ஒரு புதிய பரிமாணத்தில் மிக அழகாக அணுகியிருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். Joy Earthman A Anton Rawshan எழுத்து மற்றும் இயக்கத்தில் ஐந்தே நிமிடத்தில் வரலாற்றின் ஒரு பக்கத்தை வலிமையாகக் கூறிச் செல்கிறது.

பொதுவாக, "செம்மணி" என்றாலே அதன் பின்னால் இருக்கும் வேதனையான வரலாற்றுப் பின்னணிகள் தான் பலருக்கும் நினைவுக்கு வரும். ஆனால், இந்தக் குறும்படம் அந்தப் பெரும் அரசியல் அல்லது வரலாற்று நிகழ்வுகளை நேரடியாகப் பேசாமல் அதன் உணர்வுபூர்வமான தாக்கத்தை தனிமனித வாழ்வில் அது ஏற்படுத்திய தணியாத அதிர்வுகளை மிக நுட்பமாகப் பதிவு செய்திருக்கிறது.

திரைக்கதையில் பெரிய திருப்பங்களோ, அதிரடிக் காட்சிகளோ இல்லை. ஆனால் ஒவ்வொரு காட்சியிலும் ஒரு மெல்லிய உணர்வு இழையோடுகிறது. அது ஏக்கமா, தவிப்பா, காத்திருப்பா, அல்லது ஒருவித பதற்றமா என்று நம்மால் சரியாக வரையறுக்க முடியாத ஓர் உணர்வு. கதாபாத்திரங்களின் அமைதியான முகபாவனைகள், அவர்களின் மௌனம், சிலவேளைகளில் வெளிப்படும் ஒரு புன்சிரிப்பு இவை அனைத்தும் ஆயிரம் கதைகளைச் சொல்கின்றன.

குறிப்பாக ஒளிப்பதிவு இந்தப் படத்துக்கு ஒரு பெரும் பலம். அதிலும் யாழ்ப்பாணத்தின் மண்வாசனை, அதன் அழகு, அந்தப் பிரதேசத்தின் தனித்துவம் அனைத்தும் மிக இயல்பாகப் படம்பிடிக்கப்பட்டுள்ளன. சாதாரணமாக நாம் கடந்து செல்லும் காட்சிகள்கூட ஏதோ ஓர் ஆழ்ந்த அர்த்தத்துடன் நம்மைப் பார்க்க வைக்கின்றன. காட்சிக



ளுக்குப் பக்கபலமாக இசை அமைந்திருக்கிறது. அது ஒருபோதும் காட்சிகளை ஆக்கிரமிக்காமல் அதன் உணர்வு நிலையை உள்ளவாறே மேம்படுத்துகிறது.

இந்தக் குறும்படம் நமக்குத் தெரிந்த 'செம்மணி'யை ஒரு புதிய கோணத்தில் அணுகியிருப்பது பாராட்டத்தக்கது. பெரிய சத்தம் இல்லாமல் மெல்லிய அலை போல வந்து மனதைத் தொட்டு பாரிய தாக்கத்தைச் செலுத்திச் செல்கிறது. வரலாற்றின் வடுக்களைச் சுமந்தாலும் வாழ்க்கை அதன் போக்கில் தொடர்கிறது என்பதையும் மனித மனங்களின் நுட்பமான உணர்வுகளையும் அழகாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது.

நிச்சயமாக "செம்மணி" ஒருமுறையாவது பார்க்கவேண்டிய குறும்படம். இது நம்மை சிந்திக்க வைக்கும் அதேவேளையில் கண்கலங்கவும் வைக்கும். இறுதியில் இன்றுவரை விடை தேடித் தவிக்கும் தவிப்பையும் கண்முன் வரவைக்கிறது. இலங்கைத் தமிழ்க் குறும்படத் துறையில் இது ஒரு நல்ல வரவு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்ப்புதினம்

○ இராகவன்

பாகம் 3

37

அப்ப எங்கடையூரில ராதாமாமா வீட்டிலதான் ரீவியிருந்தது. நானும் இளையண்ணாவும் பின்னேரங்களில ராதா மாமா வீட்டை ரீவி பாக்கப் போறனாங்கள். ரீவியப் போட்டோண்ண முதல்ல கறுத்தப் புள்ளி புள்ளியா விழும். நான் "என்ன இது?"எண்டு கேப்பன். அதுக்கு ராதா மாமா 'செம்மறியாட்டுக்கூட்டம் போகுதடா மருமோன்!' எண்டு சொல்லுவார். எனக்கும் அதைப் பாக்க அப்பிடித்தானிருக்கும். ராதா மாமா கொழும்பில இராஜேஸ் வரி ஸ்ரோர் எண்ட பெயரில கடை வைச்சிருந்தவர். அவருக்கு அப்ப ஆளுங்கட்சியோடை நல்ல நெருக்கமிருந்தது. அதில யும் நிதியமைச்சரோட தோளில கைபோட்டுக் கதைக்கிற அளவுக்கு நெருக்கம். பட்ஜெட் தயாரிக்கிற மூட்டம் ராதா மாமாவை சந்திச்ச நிதியமைச்சர், "சேவெடுக்கிற பிளேற்றை தாராளமா வாங்கி ஸ்ரொக் பண்ணிவை" எண்டு சொல்லியி ருக்கிறார். அவர் சொன்னதைத் தட்டாமல் ராதா மாமாவும் செய்திருக்கிறார். அந்த வரியம் பட்ஜெட்டில சேவிங் பிளேற் றுக்கு விலை கூட்டினதால ராதா மாமாவுக்கு சேவிங் பிளேற் வித்ததில பல லட்சம் இலாபங்கிடைச்சதெண்டு அப்பா சொன் னவர்.

இயக்கங்கள் முளைவிடத்தொடங்கின காலத்தில் சில பொடி யள் வீடு வீடாப் போய் நெஸ்ற்றமோல்ற் ரின்னில காசும் நகையும் சேகரிக்கிற வழக்கமொண்டிருந்தது. அந்தப் பொடி யள் நெஸ்ற்றமோல்ற் ரின்னோட ஒரு நாள் ராதா மாமா வீட்டையும் வந்து, "ஐயா! நாங்கள் சிங்கள ராணுவத்தை எதிர்த்துப் போராட ஆயுதங்கள் வாங்கப்போறம். உங்களால இயன்ற பங்களிப்பைக் காசாகவோ நகையாகவோ தரலாம்" எண்டு ராதா மாமாக்கிட்ட கேட்டாங்கள் "காசோ நகையோ தாறதில எனக் கொரு பிரச்சினையுமில்லைத் தம்பியவை! ஆனால் எனக்கு சில டவுட்டுகள் இருக்கு. அதைக் கிளியர் பண்ணினால் நானே தனிய ஒரு ஆயுதம் வாங்கிறதுக்குக் காசு தருவன்" எண்டு ராதா மாமா அவங்க ளிட்டச் சொன்னார். அவங்களும் நக்கலாச் சிரிச்சுக்கொண்டு, "உங்கடை டவுட்டுகளை அவிட்டு விடுங்கோ ஐயா!" எண்டாங் கள். அவரும் சிரிச்சுக்கொண்டே, "ஒரு நாட்டை எதிர்த்துப் போராடி வெல்லலாம் எண்ட நம்பிக்கை உங்களுக்கிருக்கா?" எண்டு கேட்டார். "இது வழமையாய் உங்களைப்போலை ஆக்கள் எங்களிட்டக் கேக்கிற கேள்விதான். இது எங்கட இனத்துக்கான உரிமைப்போராட்டம். எங்களை ஒருத்தன் அடிக்கிறான் எண்டால் நாங்கள் திருப்பியடிக்கவேணும். அடி வாங்கிக்கொண்டு அடங்கி ஒடுங்கிப் போகக்கூடாது. திருப்பி அடிக்கிறதே எங்களுக்குப் பெரிய வெற்றிதானே? " எண்டு அவங்கள் விளக்கங்குடுத்தாங்கள். ராதா மாமா அடுத்த கேள்வியைக் கேட்டார்.

"சிறிலங்கா அரசாங்கத்துக்கு ஒரு நெருக்கடியான நிலை வந்தால் மற்ற நாடுகள் களத்தில் இறங்கும். உங்களுக்கு ஒரு நினைச்சுப் பாக்கேலாத இக்கட்டான நிலை வந்தால் உதவிக்கு எந்த நாடாவது வருமோ?"

"ஓம்! இந்தியா எங்களுக்கு உதவிக்குவரும். அன்னை இந் திரா எங்களத் தன்ர பிள்ளையளாத்தான் பாக்கிறா. அவா எங்களை எண்டைக்கும் கைவிடமாட்டா. "அவங்களும் யோசிக்காமல் பதில் சொன்னாங்கள். அதைக்கேட்டு ராதா மாமா கைதட்டிக்கொண்டே "சபாஷ்!" எண்டார். அவங்களும் வெற்றிப்புன்னகை செய்தாங்கள். "தம்பிமார்! நான் எதிர் பார்த்த பதிலைத்தான் சொல்லியிருக்கிறியள். ஆனால் உதொரு பகற்கனவு இப்ப ஜே. ஆரை வெருட்டுறதுக்கு இந் திரா காந்திக்குக் கிடைச்சிருக்கிற ஆயுதம் நீங்கள் தான். அவவோட காரியம் முடிஞ்சால் நீங்கள் நடுத்தெருவில் தான் நிப்பியள்" எண்டு ராதா மாமா சொன்னார். (தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org